241

உ

குமரன் துணை.

விவேகபாநு.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 4 } 1905௵ ஜூன்௴ { புத்தகம் 6.

வித்தை XI.

(முன் தொடர்ச்சி).

சென்ற சஞ்சிகையில் லோயர் ஸெகன்டரி பரீக்ஷையில் ஹைஸ்கூல் வகுப்புக்களுக்கு உண்டான கேட்டைப்பற்றிக்கூறினோம். 4-ம் பாரம் ஏற்பட்டதனாலுண்டாகும் கேட்டையும் ஒருவாறுகுறிப்பித்தோம். வருஷா வருஷம் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குப்பல்லாயிரம் இளைஞர்கள் பணங்கட்டுவதில் தேறுகிறவர்கள் தொகை சொற்பமே. அதற்குக்காரணங்கள் எவை என்பதைப்பற்றி ஆராய்வோம். சென்ற சஞ்சிகையிற்கூறியவண்ணம் நான்காவது பாரத்தை நன்குகவனியாததே முக்கியகாரணம். நம்ஹைஸ்கூலில் தக்க உபாத்தியாயர்களில்லாமற்போகவில்லை. சிற்சில கலாசாலைகளில் இவ்விஷயத்திலும் குறைவு உண்டு. வித்தியா இலாகாதார் பீ. ஏ. எல். டி. என்ற பட்டப்பெயரைமட்டும் கவனிக்கிறார்களே ஒழிய பாடஞ்சொல்லும் திறமையுடையவர்களையும் அனுபவமுடையவர்களையும் அவ்வளவாக மதிப்பதில்லை. முற்காலத்தில் தக்க நிபுணர்கள் ஹைஸ்கூல் வகுப்புக்களில் பாடஞ்சொல்லிவந்தனர். இக்காலத்திலேயோ பீ. ஏ. எல். டி. யாகிய எவரும் பாடஞ்சொல்லத்தக்கவரென்றே மதிக்கப்படுகிறார்கள். முற்காலத்தில் ஒரு வகுப்புக்கு ஒரு உபாத்தியாயர் ஏற்பட்டுக் கண்ணுங்கருத்துமாய்ப் பிள்ளைகளின் அபிவிருத்தியைக் கவனித்துவந்தார்கள். தற்காலத்தில் ஒரு வகுப்புக்கு

நான்கு உபாத்தியாயர்கள். மாணுக்கர்கள் திருட்டுத்தனம் பண்ணுவதற்குத்தக்க சமயம் வாய்க்கின்றது. முறகாலத்தில் ஹைஸ்கூல் மாணவருக்கு ஆங்கிலத்தில் டெக்ஸ்ட் புத்தகங்களுண்டு. தற்காலம் அவைகள் பேருக்குமட்டுமே இருந்துவருகின்றன. முன்போல வியாசமெழுதல் சிரத்தையுடன் கற்பிக்கப்படுவதில்லை. வகுப்புக்களில் பிள்ளைகள் முன்னிலும் அதிகமாகையால் சிரத்தையுடைய உபாத்தியாயர்களும் தக்கவண்ணம் கவனிக்க இடமில்லாமற்போகிறது. நாம் இது விஷயத்தில் பள்ளிக்கூடங்களையும் உபாத்தியாயர்களையும் குறைகூறுவதைக்காட்டிலும் மெட்ரிகுலேஷன் பரீக்ஷை விஷயத்திலேயே சில குறை கூறுவோம். கேள்விக்கடிதங்கள் (முக்கியமாய்ச்சரித்திரம், பூகோளம், சாஸ்திரபாடம் முதலியவைகளில் ஏற்படுகின்றவை) மாணுக்கர்கட்கு விளங்கக்கூடியவையாவும் நிச்சயமான மறுமொழி கூறத்தக்கனவாகவுமில்லை. வருஷா வருஷம் ஏதாவது ஒன்று இவ்விதமாகக் கேட்டை விளைவிக்கின்றது. மறுமொழிக்கடிதங்கள் திருத்துகிற விஷயத்திலும் பலபேர் பலவிதமாய்த் திருத்துகிறார்கள். யூனிவர்ஸிடியார் இது விஷயமாய் எவ்வளவோ சிரத்தைஎடுத்துக்கொண்டும் இக்குறைநீங்கவழியில்லை. இதனால் சில சமயங்களில் தக்கபுத்திசாலிப்பிள்ளைகள் தவறிப்போகச் சாமான்ய மாணுக்கர்கள் தேறிவிடுகிறார்கள். நம் சென்னை யூனிவர்ஸிடி பிரம்மாண்டமாகப் பெருத்துவிட்டது. குறைந்தபக்ஷம் இருபிரிவாகவாகவாவது பிரித்துத்தனித்தனி வேலை செய்தால் நலமாயிருக்கும். மூன்று பாகங்களாகப்பிரிப்பதுவும் சௌகரியமாகவிருக்கும். அவ்விதம் செய்யாவிடில் சாத்தியமில்லை. வித்தியாவிலாகாதாரும் யூனிவர்ஸிடியாரும் கலந்து இத்தரத்துப்பிள்ளைகளுக்குந் தக்கபிழைப்புக்கு மார்க்கமான தொழிற்படிப்புக்களையும் ஏற்படுத்துவார்களானல் நலமாயிருக்கும். ஆங்கிலம்கணக்குத்தவிர மற்றையப்பாடங்கள் தேசபாஷையிலேயே இருந்தால் நலமாகும். விஷயம் தெரியவேண்டுவது முக்கியமே ஒழிய பாஷை முக்கியமில்லை. ஆங்கிலத்திலேயே விஷயங்கள் கற்பிக்கப்பட்டுவருதலாலும் அன்னியபாஷையிலேயே பிள்ளைகளும் விஷயங்களை எழுதவேண்டியிருப்பதாலும் சங்கடமுண்டாகிறது. ஒரு மாணுக்கன் விஷயங்களை நன்கு அறிந்திருந்தும் பாஷைக்குறைவால் அத்தெரிந்தவிஷயங்களைச் செவ்வையாய் எழுதமுடிய

வில்லை. சுதேசபாஷையிலேயே சகல சாஸ்திர விஷயங்களும் சரித்திர விஷயங்களும் கற்பிக்கப்படுமானால் மாணக்கர் பற்பல விஷயங்களை மிகச்சொற்ப காலத்தில் கற்றுக்கொள்ள இடமுண்டு. பாஷையின் கஷ்டத்தால் பாஷையும், விஷயமும் இரண்டும் கெட்டுப்போகின்றன. சுதேசபாஷையைக் கையாளவேண்டிய சமயத்தில் அதைத் தக்கவண்ணம் கையாண்டு, ஆங்கிலம் கற்கவேண்டிய சமயத்தில் அதனைக் கையாண்டும் வந்தால் இரு விஷயங்களும் பக்கபயனடையும். இவை நிற்க. மற்றும் சில முக்கியகாரணங்களுண்டு. அதை முற்காலத்தில் இப்பாடசாலைகள் தக்கபடி செலவுசெய்யக்கூடிய கவரன்மெண்டார் பொறுப்பிலிருந்தது. அதனால் மாணக்கர்களைச் சேர்க்குங்கால் யோக்கியதை அறிந்து சேர்த்துவந்தார்கள். பரீக்ஷை செய்து மேல்வகுப்புக்கு மாற்றுங்காலத்திலும் கண்டிப்பான சட்ட திட்டங்களை அனுசரிப்பது வழக்கம். தற்காலமோ பாடசாலைகளுக்குச் சம்பளமே முக்கியவருவாய். அவ்வருவாயில்லாவிடின் பாடசாலையே நடப்பது கஷ்டம், அதற்காக நெட்டையோ குட்டையோ, மேடோ, பள்ளமோ சம்பளத்துக்குத் தக்கவண்ணம் எல்லாம் நடக்கின்றன. இவ்விதக்குறைவு இருக்கும்வரை விஷயங்கள் சீர்திருந்துவதுகஷ்டம். இதற்கும் மேலாக வேறொரு முக்கியகாரணமுண்டு. அஃதாவது.

முற்காலம் பிள்ளைகள் உழைத்து வேலை செய்து விஷயங்களை அறியமுயல்வார்கள். தற்காலம் சுருக்க புத்தகங்கள் பல்லாயிரக்கணக்காக ஏற்பட்டு மாணக்கர்களை மிகவும் கெடுக்கின்றன. ஆடு தழை மேய்கிற விதம் இந்தப்புத்தகத்தில் சொற்பம் அந்தப் புத்தகத்தின் சொற்பம் படித்து ஒன்றையும் முற்றிலும் படியாமல் மாணக்கர் கெட்டுப்போகின்றனர். இன்னதுவாசிக்கவேண்டுவது என்று கூடத்தெரியாத மாணக்கர் பலர் என்பதை எவரும் ஆக்ஷேபணை செய்யமுடியாது. ஆகையால் இக்குறைவுக்கு உபாத்தியாயர்களும், மானேஜர்களும, யூனிவர்ஸிடியாரும், வித்தியா இலாகாதாரும், பரீக்ஷகர்களும், சுருக்கம் புத்தகங்கள் போடுவோரும், காரணஸ்தராவதன்றி டெக்ஸ்ட் புத்தகம் ஏற்படாதிருப்பதும் மாணக்கர் தக்கவண்ணம் சரியான பாதையில் உழைக்காததும் தக்ககாரணங்களாகின்றன. இத்துணைவிஷயங்களும் மாணக்கர் மதியைமயக்கி அவர்களுக்கும் தேசத்துக்கும் கேடுவிளைவிக்கின்றது. ஊர்தோறும்

தொழிற்பாடசாலைகள் ஏற்படுத்திப் பிழைப்புக்குவேண்டிய கல்வியைக்கற்பிக்கக் கவர்ன்மெண்டாரும் ஜனங்களும் ஒத்து உழைத்து ஏற்பாடுசெய்வார்களானால் இக்குறை ஒருவாறு நீங்கித் தேசத்துக்கு க்ஷேமமுண்டாகும். இது விஷயமாய் அடுத்த சஞ்சிகையில் எழுதுவோம்.

(இன்னும் வரும்)

பத்திராதிபர்.

மனிதனும் அவன் உடல்களும்.

“அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
மறவாழி நீந்த லரிது.”
“அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிட ராத லரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீக்கிப் பிறத்த லரிது
பேடு நீக்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயத்த காலையும்
தானமுந் தவமுந் தான்செய லரிது
தானமுந் தவமுந் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.”

அண்ட சராசரங்களையெல்லாம் அன்பினால் ஈன்று அவைகளில் ஐந்தொழில் நடாத்தி விளையாடும் அகிலநாயகியாம் ஆனந்தவல்லியின் அருமைத்திருவருள் அடைந்து க்ஷேத்திரங்களெல்லாவற்றினுஞ் சிறந்த காசியம்பதியை இப்பொழுது தனக்கு இருப்பிடமாகக் கொண்டு விளங்கும் எனது அன்புருக்கொண்ட அருந்தவச்செல்வ அன்னையாகிய அன்னிபெஸண்டு அம்மையவர்கள் “தான் ஆர்? தனக்காதாரத்தலைவன் எவன்? தனது சக்திகள் வெளித்தோன்றிப் பிரகாசிப்பதற்கான உடல்களின் இலக்கணம் யாது?” என்னும் வினாக்களுக்குத் தனது சுவானுபூதியினுணர்ந்த அநுபவத்தை மற்ற

வர்களும் உணர்ந்து உய்யவேண்டுமென்னுங் கருணைநோக்கத்தினால் தனது சுயபாஷையாகிய ஆங்கிலத்தில் மனிதனும் அவன் உடல்களும் என்றுபெயரிட்டுப்பிரமஞானச்சங்கக் கையேடுகளில் ஏழாவது முறைப்புத்தகமாக ஒரு நூல் எழுதியுள்ளார்கள். இந்நூலிலுள்ள விஷயங்கள் அருமையானவையாதலாலும் உடம்பெடுத்துவந்ததின் பயனாகிய உடம்பினுள்ளிருக்கும் உத்தமனைக்காணும் வழியை இந் நூல் சுலபமாகக்காட்டுவதாலும் இந்நூலைத் தமிழுலகம் உணர்ந்து உய்யுமாறு தெளிவான நடையில் விரிவாய் மொழிபெயர்த்து வரை கின்றேன்.

நூன்முகவுரை.

இச்சிறு புத்தகத்தை உலகில் பரவவெளிவிடும் விஷயமாய்ப் பலவார்த்தைகள் சொல்லுதல் அவசியமின்று. "தியாசவி" என்று இங்கிலீஷில் வழங்கும் பிரமஞான சித்தாந்தங்களைக்கருகலான உயர் தரநடையிலல்லாமல் பேதைமைவாய்ந்த ஜனங்களும் அறிந்து ஆனந்த மடையுமாறு சுத்தத்தெளிவான நடையில் விளக்கி விரித்துரைத் தல் வேண்டுமென வருந்திக்கேட்கும் வெளி ஜனங்களின் கருத்தை முன்னிட்டு ஏற்படுத்திய பிரமஞானக் கையேடுகளின் கோவையில் இஃது ஏழாவது. சாமானிய படிப்பாளிக்கு நமது ஞானநூல்கள் ஏககாலத்தில் மிகவும் கருகலாயும் கடினமாயும் பரிபாஷை நிறைந்த வையாயும் இருப்பதுமன்றிப் புத்தகங்கள் அதிக விலையுயர்ந்தவை யாயுமிருப்பதாகப் பலர் முறையிட்டுக்கொண்டனர். அத்தகையினருக்கு இப்பிரமஞானக் கையேட்டுக்கோவை திருப்தியைக் கொடுக்கு மென்பது எங்கள் கோரிக்கை. பிரமஞானம் பண்டிதர்களுக்குமாத் திரம் ஏற்பட்டதன்று. பண்டிதர் பாமரர்கூடிய ஆன்மகோடிகள் சகலருக்கும் அது பொதுவே. பிரமஞானச்சித்தாந்தங்களை முதல் முதல் இச்சிறு புத்தகங்களின்வாயிலாக அறிந்து பற்றும் ஜனங்க ளுள் சிலர் இச்சிறு புத்தகங்களில் விவரித்திருக்கும் சித்தாந்தங்களை மாத்திரம் அறிவதுடன் நில்லாமல் மேற்சென்றுபோய்ப் பிரமவித்தை யின் தத்துவஞானத்தையும் ஒழுங்கையும் நியாயப்போக்கையும் அனுபவத்தையும் மதக்கோட்பாடுகளையும் ஆழ்ந்து புகுந்து விசாரிக் கவேண்டுமென்னும் பேரவாக்கொண்டு உந்தப்பட்டு விசாரணையில்

நேரிடும் அதிக கருகலான விஷயங்களைக்கண்டு பயந்து மலைத்துப் பின்னிடையாமல் அவைகளை எதிர்நின்று நேர்நோக்கி மாணுக்கனுடைய உற்சாகத்தோடும் சீடனுடைய உக்கிரவைராக்கியத்துடனும் பெருநூல்களில் உட்சென்று ஆழந்து ஆராயப்போகலாம். ஆனால் இக்கையேடுகள் ஆரம்பத்திலுண்டாகும் சங்கடங்களால் கலங்கி வீரங்கெட்டுப் பின்னடையக்கூடாத தீவிரபக்குவமுள்ள சீடர்களின் பிரயோஜனத்திற்காக எழுதப்பட்டவையல்ல. தினமும் உழைத்தே வயிறுவளர்க்கவேண்டியவர்களாகிய லௌகீகத்தொழில் முயற்சியுள்ள ஸ்திரீபுருஷர்களுக்காக இக்கையேடுகள் எழுதப்பட்டு அவர்களுக்கு இப்பூவுலகத்துன்பவாழ்வைப் பொறுமையுடன் சகித்துநிற்கவும் நிச்சயமாய்வரக்கூடிய மரணத்தைப்பயமின்றி எதிர்த்துச்சந்திக்கவும் செய்யவல்ல சில அரியபெரிய உண்மைகளைத் தெளிவாக விளக்குவதற்கு இப்புத்தகங்கள் நாடுகின்றன. நமது ஜாதியின் மூத்தசகோதரர்களாகிய குருநாதர்களின் அடியார்களால் எழுதப்பட்ட இக்கையேடுகள் நமது உடனொத்த மனிதர்களுக்கு உபகாரமாயிருக்கும்படியானவையேயன்றி வேறு யாதொரு பிரயோசனத்தையும் நாடினவை யல்ல.

(இன்னும் வரும்).

தி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை.

மனிதனது எழுகூறு.

நான்காவது ஐந்தாவது கூறுகளாகிய காமம் மனசு என்னும் அம்சங்கள் தோன்றும் சூக்ஷ்மமாகிய ரூபங்களைப்பற்றி இங்குச் சற்று கவனிப்பாம். காமம் மனசு என்பவைகள் சக்திகள். பிரபஞ்சத்தில் சக்தியானது தனியாய் விளங்குவதில்லை. அது எப்பொழுதும் ஒரு வஸ்துவினிடத்துத் தோன்றுமேயல்லது தனியாயிருப்பதில்லை. உண்மையில் பதார்த்தமின்றிச் சக்தியில்லை. சக்தியின்றிப் பதார்த்தமுமில்லை. இவ்விரண்டுங் கூடியே அனுபவத்தில் காண்கின்றோம். காமமாகிய சக்தி தோன்றுதற்குரிய வஸ்து அல்லது பதார்த்தம் புவர்தலத்து பூதலத்ததன்று. இவ்வஸ்துவுக்குப்

புவர்வஸ்து, புவர்தத்துவம் என்று பெயர். ஜீவர்களுக்குள் காம சக்திதோன்றுதற்குரிய உபாதியைப் புலன்கள், புலப்புரம், மதனதேகம், மதனபுரம் ஆசாபாசதேகம், இந்திரியசரீரம், இந்திரியலோகம், இந்திரியவுடல், காமதேகம் என்றும் இச்சொற்களின் அருத்தமுள்ள வேறுசில வார்த்தைகளாலும் சொல்லுவர். காமசக்தி தனக்குரிய உபாதியைப் பொருந்தி விளையாடுந் தலத்திற்குப் புவர்லோகம்: புவர்தலம், காமதலம், காமபுவனம் என்பார்கள். பூதலமானது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், அநுபாதகம், ஆதி, என்னும் எழு உட்பிரிவுத்தலங்கள் கொண்டிருப்பதுபோலவே புவர்தலமும் ஒன்றைவிட ஒன்று அதி சூக்ஷ்மதாமாயிருக்கும் எழு உட்பிரிவுத் தலங்கள் கொண்டிருக்கின்றது. இதுபோலவே மனசு என்னும் மானதன் தனது உபாதியாகிய மானததேகம் அல்லது மனம் அல்லது அந்தக்கரணத்தைக் கொண்டு தொழில்செய்வதற்கான மனோதலமும் எழு உட்பிரிவுகள்கொண்டிருக்கின்றது. கீழ்நான்கு உட்பிரிவுகளை ரூபமனோதலங்கள் என்றும் மேல் மூன்று உட்பிரிவுகளை அரூபமனோதலங்கள் நூல்கள் கூறும். கீழ்மனசின் உபாதியானது ரூபமனோதலத்து வத்தினாலாயது. இந்த உபாதிக்கு மனம், மனோசரீரம், மனோதேகம், மனோபுரம், என்றும் பெயர். கீழ்மனசு தன்சுய உபாதியாகியுடன்மாத்திரம் நிற்கும்பொழுது மனோலோகத்தின் அனுபவங்களைமாத்திரம் அறியுமேயன்றிக் கீழுலகங்களின் அனுபவங்களை யறியாது. கீழுலகங்களையறிவதற்காக அது புவர்தத்துவத்தினாலாய சரீரமாகிய காம உபாதியென்னும் காமதேகத்தையும் பொருந்துகின்றது. காமதேகமும் மனோதேகமுஞ் சேர்ந்து நமது சாஸ்திரங்களில் சொல்லும் மனோமயகோசமாம். சூக்ஷ்மசரீரம் என்பதும் இம்மனோமயகோசமே. சிலர் பிராண[illegible] கோசமாகிய நுண்பூதவுடலையும் மனோமயகோசத்துடன் சேர்த்துச் சூ[illegible] தேகம் என்பார்கள். ஆனால் நுண்பூதவுடல் அன்னமயகோசமாகிய [illegible] பூதவுடலைப்பார்க்கிலும் சூக்ஷ்மமாயினும் பூதல தத்துவத்தினாலா[illegible] இதை ஸ்தூலசரீரத்துடன் சேர்த்தெண்ணுவதே நலம். திரிபுரசம்[illegible] கதையால் வெள்ளிக்கோட்டையானது இந்த மனோமயகோசமாகிய [illegible] சரீரமே. எவனது அறிவு மனோதேகத்தில் அதாவது கீழ்மனசாகிய [illegible] கரணத்தில் பிரஞ்ஞையுடன் தொழில்செய்கின்றது அப்புருடன் சூ[illegible] யனும்.

உயிருடனிருக்கும்பொழுதே இந்தச் சூக்ஷ்மசரீரத்தை ஸ்தூலதேகத்[illegible] னின்றும் பிரித்து வெளியே பிதுக்கிக்கொண்டு அறிவுடன் வெகுதூர[illegible] செல்லலாம். உபகரணிகளுக்கும் சுறுக்கான உணர்ச்சியுள்ளவர்களுக்கும் சூக்ஷ்மதேகம் பிதுங்கிச்செல்லும் ஆனால் பிரஞ்ஞையிராது. யோகாப்பியாசத்தில் பயின்ற சீடர்களோ சூக்ஷ்மதேகத்தில் பிரஞ்ஞையுடன் எங்குஞ்

செல்லுவார்கள். இந்தச் சூக்ஷ்மதேகம் மனோவேகத்துடன் வெகுதூரமான விடங்களுக்கெல்லாஞ் சென்று அவ்விடங்களின் காக்ஷிகளின் பதிவுகளைக் கிரகித்துத் திரும்பிவந்து ஸ்தூலதேகத்திற்கு அந்தப்பதிவுகளைக் கொடுக்கக்கூடும். உபகாரணியின் சூக்ஷ்மதேகம் இப்படி வெகுதூரஞ் சென்று அவ்விடத்துத் தோற்றங்களின் பதிவுகளைப் பெற்றுவந்து ஸ்தூலதேகம் பிரக்ஞைகெட்டு மயக்கம் அல்லது சுழுத்தி அல்லது மூர்ச்சைகொண்டிருக்கவும் அந்த ஸ்தூலதேகவாயிலாக மற்றவர்களுக்குத்தான் ஆர்ச்சித்துவந்த பதிவுகளைத் தெரிவிக்கும். ஆனால் சாதாரணமாய் உபகாரணிமயக்கத்தினின்றும் நீங்கினபிறகு அவனது அல்லது அவளது ஸ்தூலதேகமூளையானது இந்தப்பதிவுகளைப் பிடித்துவைத்திருப்பதில்லை. ஆகையால் இவ்விதமாக ஆர்ச்சித்த அனுபவங்களின் சுவடு சற்றேனும் ஞாபகத்திலிருப்பதில்லை. ஆவேசக்காரர் என்றும் மருள்கொண்டவர்கள் என்றும் உலகில் சாதாரணமாய்ச் சொல்லப்பட்ட மனிதர்களின் அனுபவமிப்படிப்பட்டதே. அவர்கள் குறிசொல்லுவதெல்லாம் அவர்களுடைய சூக்ஷ்மதேகமானது ஸ்தூலசரீரத்தினின்றும் பிதுங்கி வெளியே போய்க்கொண்டுவந்த அனுபவங்களை ஸ்தூலதேகம் மூர்ச்சையிலிருக்கவும் சூக்ஷ்மசரீரமானது ஸ்தூலநாவையதிஷ்டித்துநின்று அந்தநாவை இயக்கி அதனால் கூறுவதே. அவர்கள் மூர்ச்சை தீர்ந்து சாதாரண விழிப்புநிலைக்குவந்தவுடன் தாங்கள் சொல்லின குறிகளும் செய்த செய்கைகளும் அவர்கள் ஞாபகத்தில் சிறிதுமிருப்பதில்லை. சொன்ன குறிகளோ யாவரும் வியக்கும்படி சரியாகவிருக்கும். ஆகையாற்றான் ...வர்களின் ஆவேசம்நீங்கி மூளைமயக்கந்தெளிந்து விழிப்புக்குவரவும் அருகி...நப்பவர்களை நோக்கிச் "சாமி யென்னசொல்லிற்று" என்று வினவிக் ...டுத் தெரிந்துகொள்ளுவார்கள். சிலகாலங்களில் (ஆனால் இது வெகு ...வம்) சூக்ஷ்மதேகமானது தன்து ஸ்புரணங்களின் பதிவுகள் ஸ்தூல ...யில் தரித்துநிற்பதற்குப் போதுமானபடி ஸ்தூலமூளையை உறுத்தக் ... அப்பொழுது மருள்கொண்டவன் மயக்கந்தீர்ந்து சாதாரண விழிப்பு ...் வந்தபிறகும் சூக்ஷ்மசரீரம் வெளியேபோய்க்கண்டுவந்த தோற்றங் ...ளெல்லாம் ஒரு பக்கத்திற்குக் கொண்டுவரக்கூடும். சற்குருவின் கடா ...பற்று யோகாப்பியாசஞ் செய்யும் சீடனுடைய உள்ளமானது உப ...ளின் உள்ளம் செயலின்றித் தூக்கமாயிருப்பது போலில்லாமல் முய...டன் சுறுசுறுப்பாயும் என்றும் விழிப்பாயும் கவனமாயுமிருப்பதால் ...க்ஷ்மதேகம் கண்டும் கேட்டும் ஆர்ச்சித்த அனுபவஞானத்தை ஸ்தூல மூளையில் பதியும்படி செய்துகொள்ளத் தெரிகின்றான்.

சூக்ஷ்மசரீரம் ஸ்தூலத்தைவிட்டு வெகுதூரங்களுக்குப்போய் அவ்விடங்களிலுள்ள ஜனங்களின் புலன்களுக்குத் தோன்றவும் கூடும். நுண்ணிய

கூச்சசுபாவநரம்புக்கட்டுள்ள மனிதர்களுக்கு முக்கியமாய் இச்சூக்ஷ்மசரீரம் தோன்றக்கூடும். இச்சரீரத்தை அறிவு சோர்வாய்க்கிளர்த்திருப்பின் அவர்களுக்கு இந்தச் சரீரம் சுற்றிலும் உள்ளவர்களையும் உள்ளவைகளையும் கவனியாது தெளிந்தவரையின்றிப் பனிமூடி விளக்கமற்றிருக்கும் உருவமாகக் காணும். சாகுந்தறுவாயில் சாகும் மனிதனுக்கு இரத்தக்கலப்பு, சிநேகம், காதல், பகையென்னும் பந்தங்களினால் பிணைபட்டு தூரதேசங்களில் இருக்கும் ஜனங்களுக்கு இறக்கும் மனிதனுடைய சூக்ஷ்மசரீரந் தோன்றியதாக அனேக திருஷ்டாந்தங்கள் உள. இந்தச் சூக்ஷ்மசரீரம் இன்னும் அதிகமாய் உஞற்றப்பட்டு மிகுந்த சத்துவமும் ஊக்கமும் பெற்றால் அஃது அறிவையும் மனோசலனகுணங்களையும் காட்டும். தூரத்தில் வசித்துக்கொண்டிருக்கும் தங்கள் குழந்தைகளைப் பார்க்கவேண்டுமென்னும் பேரவாவினால் இறக்குந் தருணத்தில் தாய்மார்கள் சூக்ஷ்மதேகத்தில் அக்குழந்தைகளிடம் சென்று பார்த்துவந்து தாங்கள் கண்டதையும் செய்ததையும் சொன்ன திருஷ்டாந்தங்கள் சரித்திரங்களில் வரையப்பட்டிருக்கின்றன. நுண்பூத உடலைப் போலவே இந்தச்சூக்ஷ்மதேகம் சிலவியாதிகளில் ஸ்தூலத்தின் கட்டினின்றும் நித்திரையிலும் மூர்ச்சையிலும் ஆவதுபோல விடுபடுகின்றது. சூக்ஷ்மதேகம்பிரிந்து இவ்வாறு உலாக்கல்போதலுக்கு ஸ்தூலதேகம் மந்தமாய்ச் செயலற்றிருத்தல் முக்கியமானது.

பரமியக் கொலுவீடுகளிலும் இந்தக்காமதேகமானது இடைக்கிடையே தோன்றுவதாகக் காணுகின்றது. அக்கொலுக்களில் முன்சொல்லியபடி சாதாரணமாய் உபகாரணியின் நுண்பூதவுடலைக்கொண்டும் இறந்துபோனவர்களுடைய பிரேதங்களைக்கொண்டும் தனியாகவும் கொலுக்களுக்கு வந் ருப்பவர்கள் மனத்தில் உதிக்கும் எண்ணங்களின்படி சிலசெய்கைகள் செ வும் இறந்துபோன மனிதர்களைப்போல் நடிக்கவும் பேசவும் செய்யும். விதமான காக்ஷிகளில் மனோசைதன்னியம் விளங்கும் ஜீவர்களின் களிலும் வசனங்களிலும் புத்தியின்வல்லபம் விளங்குவதுபோல் வி மல் அவைகள் விவேகமற்ற நிர்மூடர்களுடையவும் விலங்குகளினுடை வசனங்களும் செயல்களுந்தான் காணலாம். முடிந்தபக்ஷம் உபகரண விவேகபலம், புத்திகூர்மை, மனோசக்திகளுக்கு அதிகப்படாமலிரு உதாரணமாக உலகெலாம் மெச்சும் நாடகக்கவியாகிய (Shakesp என்பவரின் உயிர் என்று சொல்லிக்கொண்டு தோன்றின உருவம பேசினதும் கவிசொன்னதும் உன்னதகருத்துக்களடங்காதனவாய்ச் சா ரண நாகரீகமற்ற விவேகசூனியர்களுடைய வசனங்களைப்போலுமிருந்தன. காமதேகத்தினால் அக்கொலுக்களில் காக்ஷிகள் உண்டானபோது உன்னத புத்தித்தோற்றமுங் காணப்பட்டது. இக்தக் காமதேகத்தைப் பிரேதத்

துடன் கலவரிக்கப்படாது. பிரேதம் என்பது இறந்துபோன மனிதனுடைய காமதேகம் அல்லது காமமனசின் சவம். அதாவது ஸ்தூலதேகம் இப்பூலோகத்தில் ஜீவன் அதைவிட்டு நீங்கவும் பிணமாகவிழுந்ததுபோல காமமனோதேகத்துடன் காமலோகத்திற்கு இறந்தபின் சென்றஜீவன் அக்காமமனோதேகத்தைவிட்டு நீங்கிச்சுவர்லோகம் போகவும் காமலோகத்தில் ஸ்தூலபிணத்தைப் போலான காமமனசின்பிணம் பிரேதம் என்னப்படுவது. ஆனால் மனத்தின் சாதுரியமும் புத்திசாதுரியமுங் கலந்து விளங்கும் காக்ஷிகளுக்குக் காரணமாயிருக்கும் காமதேகமானது உயிருடன் உலகில் வாழும் மனிதனது சூக்ஷ்மதேசப்பிதுக்கம். இதில் மனத்தின்செயல் கூடியிருக்கும்.

சூக்ஷ்மதேகத்தில் இன்னும் உயர்ந்தவகை ஒன்றுண்டு. அது மனசைச் சார்ந்தது. இதற்கு மாயாவிநபம் என்றுபெயர். இந்த ரூபமானது மஹான்களாலும் நாதாக்களாலும் சித்தர்களாலும் அவர்களுடைய சீஷர்களாலும் மனோவிச்சையால் ஒருகாரணங்கருதி அறிவுடன் உண்டாக்கப்படும் ரூபமாம். இந்த ரூபமானது உண்டாக்கினவர்களின் ஸ்தூலதேகத்தின் உருவம்போலிருந்தாலும் இருக்கும். வேறு உருவமாயிருந்தாலும் இருக்கும். தாங்கள் உத்தேசித்த காரியத்திற்கு எவ்வித உருவம் அநுகூலமாயிருக்குமோ அவ்வித உருவமாக மாயாவிரூபத்தை அவர்கள் உண்டாக்கி வெளியே பிதுக்குவார்கள். இந்தசரீரத்தில்—மாயாவிரூபத்தில்—பூரண அறிவு, பிரஞ்ஞை யிருக்கும். ஏனெனில் அதுமனோதேகமேயன்றி வேறன்று. அதன் ழுங்குமாத்திரம் வேறுபடுத்தப்பட்டது. அதனால் ரூபம் பேதப்பட்டது. ண ஞானிகளும் சித்தர்களும் அவர்கள் சீஷர்களும் இஷ்டப்படி இந்த மா ரூபத்தில் ஸ்தூலதேகத்தின் சுமையின்றியும் சக்திகள் எல்லாம் பூரண கத்துடனிருக்கவும் பூரண பிரஞ்ஞையுடனும் எங்கும் சஞ்சரிப்பார்கள். கள் தங்கள் இஷ்டப்படி தங்கள் மாயாவிரூபத்தைச் சிலருக்குத்தோன் , சிலருக்குத்தோன்றாமலிருக்கவும், ஒருகூட்டமாகவுள்ளவர்களிலே லருக்குத்தோன்றவும் மற்றவர்களுக்குத் தோன்றாமலிருக்கவும் செய் ாள்ளுவார்கள். இன்னும் அவர்கள் இந்தமாயாவிரூபத்தைத் தாங்க டி இஷ்டப்பட்டால் ஸ்தூலதேகத்தைப்போல் பார்வைக்கும் ஸ்பரிசத் தும் வித்தியாசமில்லாதிருக்கும்படி செய்துகொண்டு எத்திக்கிலும் வ்விடங்களிலும் போய் சம்பாஷணையுஞ்செய்வார்கள். அப்பொழுது அந்த ரூபத்தைத் தொட்டாலும் ஸ்தூலதேகத்தைப்போலவே சூடாகவிருக்கும். மஹாத்துமாக்களும் ஞானயோகிகளும் இப்பொழுது இங்கிருந்தார்கள். அடுத்த நிமிஷத்தில் பதினாயிரம் மைலுக்கப்பால் வேறுதேசத்திலிருந்தார்களென்று சொல்லுவதைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் மாயகவிரூபந்தான்

இப்படி ஸ்தூலதேகம்போல் நடித்துச்செல்வது. அப்பொழுது அவர்களுடைய உண்மையான ஸ்தூலதேகம் ஒரு பத்திரமான இடத்தில் சீஷர்களால் காக்கப்பட்டிருக்கும். ஆனால் இந்த மாயாவிரூபத்தை உண்டாக்கிக்கொள்ளும் சக்தியானது நாதாக்கள் சித்தர்கள் அவர்கள் உயர்ந்த சீஷர்கள் இவர்களிடத்துத்தான் உள்ளது. அப்பியசிக்காத சீடன் சுபாவம் எவ்வளவு புலச்சுணையுள்ளவனாயினும் இந்த மாயாவிரூபத்தை யுண்டுபண்ணவல்லவனல்லன். ஏனெனில் இஃது உயர்தரமனசைச் சேர்ந்த சிருஷ்டியாகும் தாழ்ந்த புலச்சிருஷ்டியன்று. குருவின் உபதேசம்பெற்றுத்தான் இந்த மாயாவிரூபம் உண்டுபண்ணுவதற்குச் சீஷன் தெரிந்துகொள்ளலாம்.

[இன்னும் வரும்.]

தி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை.

புரந்தர் தாஸ்.

:o:

பூனாவுக்கு அண்மைத்தாய புரந்தகேத கிராமத்தின்கண் திம்மப்பன் என்னும் ஓர் ஸ்மார்த்த வேதியனிருந்தான். அப்பார்ப்பான் குபேர நிகர் செல்வனாயினும் தான் இளமையிற்கற்ற "அறஞ்செய விரும்பு" என்னும் அருமை வாக்கியத்தை "அறஞ்செயவிரும்பேல்" என்றே பாடஞ்செய்து ஏற்றவர்க் கரைக்காசும் ஈயா நோன்பையே அனுஷ்டித்து வந்தனன்.

இங்ஙனமிருக்க ஓர் பருவகாலத்தில் அவ்வந்தணன் நீராடுவான் பீமா நதிக்கேகி விப்பிரர்கள் தன்பால் தக்ஷிணைக்கு அணுகாவண்ணம், ஓர் தனிமையான தானத்தைத் தேடிக்கொள்வானாயினன். இந்த உலுத்தனைப் பரீக்ஷிப்பதற்கு ஸ்ரீயப்பதி ஒரு விருத்தாப்பியனாக உருவெடுத்துத் திம்மப்பனிருந்த ஸ்நானகட்டத்திற்றோன்றி அவனையாசீர்வதித்துப் தக்ஷிணை தருதியெனத் தன் கரத்தை நீட்டினான். நீட்டவே திம்மப்பன் முனி[illegible] தக்ஷிணைகொடுக்க மனமில்லாதவனாய்த் தன்னில்லமேகினன்.

சின்னாட் கழிந்த பின்னர் திருமால் தாமொரு விருத்தனாகவும் நான்முகனைத் தம் சுதனாகவும் அழைத்துக்கொண்டு திம்மப்பன் கடைக்கு வந்து அவனை ஆசீர்வதித்துத் தம் குமாரனது உபநயனத்திற்கு ஓராயிரம் ரூபா அளிக்கும்படி வேண்டினர். திம்மப்பன் அக்கிழவருக்கு ஓர் காசும் ஈயேனென்றனன். பின்னர் அவ்வரி திம்மப்பன் இல்லத்திற்கேகி அவனில்லாளை இத் தரும காரியத்திற்கு உதவ வேண்ட, அம்மாது சீதாப்

பிராட்டி, தமயந்தி இன்னோரன்ன அழகும் உதாரகுணமுமுள்ளவளாதலின் தன் வழக்கப்படி தன் ஆபரணங்களிலொன்றை அவ்வயோதிகனுக்கீந்தனள்.

அம்மூப்புடையோர் அதைப் பெற்று அவ்விடம் விட்டு நீங்கி ஒரு போர் வீரன் வேடம் பூண்டு அந்த நகையை விற்கத் திம்மப்பன் கடைக் கேகினன். அவ்வேட முதியோர் திம்மப்பனுக் கவ்வணியைக் காட்டி இதை வைத்துக்கொண்டு ஆயிரம் ரூபா தனக்களிக்கும்படி வேண்டினர். அவ்வுலோபி அதைத்தன் இல்லக்கிழத்தியினதென்று ஐயமுற்று அதை எடுத்து ஒரு பெட்டகத்தில் வைத்துப் பத்திரமாக முத்திரையிட்டான். திம்மப்பன் அப்போர் வீரனை விளித்துச் சிறிது நேரஞ்சென்று வருகவென் றுரைத்துத் தன் மனையேகி மனையாளை யழைக்க அவ்வுத்தமி யெதிர்வர இவ்வாபரணம் அவள் அணியாதிருத்தலைக் கண்டு அதைத் தன்பால் கொணர்கவெனக் கட்டளை யிட்டனன். அவ்வுத்தமி அஞ்சி இன்னது செய்வதென்று உணராமல் தான்போய் அவ்வணியைக் கொணர்வேனெனப் புகன்று, அடிசிலறைக் கேகித் தன்னை இத்தருணம் துன்பத்திற்கு ஆளாக்காமல் கிருபை புரியவேணுமாய்க் கடவுளைத் தியானித்தும் அது பயன்படாமைகண்டு விடத்தை அருந்தும் திடசித்தத்துடன் கிண்ணத்தை யெடுக்கவே, அதனடியில் தன்னாபரணம் இருக்கக்கண்டனள்.

பின்னர் அக்குணவதி அவ்வணியை யணிந்துகொண்டு தன் நாயகன் முன் போந்தனள். திம்மப்பன் அவ்வாபரணத்தை எடுத்துக்கொண்டு தன் கடைக்குப்போய் முன்னந்த யுத்தவீரரால் கொடுக்கப்பட்ட நகையை வைத்துப்பூட்டி முத்திரையிட்டிருந்த பெட்டியைத் திறந்து அதில் அந் நகையைக் காணாது மயங்கி ஆ! இதென்ன அற்புதம் எனத்திகைத்துத் தன் மனைக்கேகி நடந்தவையனைத்தையும் நன்கு விசாரித்தறிந்து இஃ தெல்லாம் ஈசன் மாயையென்று தேர்ந்தனன்.

இதன் பின்னர் அவனுக்கு அஞ்ஞானம் நீங்கி இவ்வுலகப்பற்றை ஒழிக்குங்காலம் நேர்ந்தது. பாரமார்த்திகமாய்த்தன் வாழ்நாளைக் கழிக்காமல் இவ்வுலகிலிருப்பது பயனற்றதென வுணர்ந்து தன் அரும்பெருஞ் செல்வத்தை வேதியரனைவருக்கும் மனமுவந்து ஈந்தனன். பின்னர் அவன் இவ்வுலக இச்சையை ஒழித்துக் காஷாய ஆடை புனைந்து தனது இல்லத்தை விட்டேகிப் பல்லாரி ஜில்லாவில் ஹோஸ்பேட்டைக்கு அருகாமையிலுள்ள தூய்மைத்தான பம்பாக்ஷேத்திரத்தை அடைந்தனன். அவ்விடத்தில்வீற்றிருந்து அவனிமாக்களுடைய அஞ்ஞான இருளைப்போக்கும் சக்தியுடைய வியாசராய சுவாமிகள் என்னும் ஓர் உத்தமகுருவையடைந்து அவரால் சகல

ஞானரகசியங்களை யுபதேசிக்கப்பெற்று மத்வமதத்தைக் கைக்கொண்டு அவர்க்கு ஓர் சிஷ்யனாயினன். பின்பு அவரிடம் எல்லாக்கலைகளையும் நன்கு கற்றுணர்ந்து யோகியானார். சிறிதுகாலஞ் செல்லவே அக்குருவினிடத்து விடைபெற்றுப் பரதகண்டமுழுமையும் சஞ்சாரம்செய்து கடைசியாக பீமாநதி தீரத்திலுள்ள பண்டராபுரத்தின் கண் போந்து வதிந்தனர். இத்தலத்தின் கண் அவர் திருமாலின்மீது திருப்பாக்களாகிய (480,000) நான்கு லக்ஷத்தெண்பதினாயிரங் கீர்த்தனைகளை (32) முப்பத்திரண்டு ராகங்களில் பாடித்தம் குருவுக்குச் சமர்ப்பித்தனர். அவரைத்தான் புரந்தரதாஸ் என்று நாமனைவரும் சொல்லுகிறோம். அவர் பாடின கீர்த்தனங்கள் முற்றும் நம்பால் இல்லை. மத்வமதத்தைச் சார்ந்தோருள் இக்கீர்த்தனங்களை அறியாதார் இலர். கன்னடபாஷை பேசும் ஜனங்களால் அவைகள் சுலபமாய் அறியக்கூடியவைகளாய் இருக்கின்றன.

அவைகளில் எல்லாத் தத்துவங்களும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் ஒவ்வொருவரும் அவைகளை அறிதல் அவசியம்.

பல்லடம்,
25—6—05.

M. ராகவேந்திராச்சார்,
ஸ்கூல் உபாத்தியாயர்.

அழியா வீடும் அழியா ஆஸ்தியும்.

அன்புள சிநேகிதனே!

நீ பற்பல சமயங்களிலே நமக்கு ஓர் அழியாத வீடும் அழியாத ஆஸ்தியும் சம்பாதித்துக்கொளல் வேண்டுமென்று ஆசைப்படுவதுண்டல்லவா? அதில் நீ எந்த வீட்டையும் எந்த ஆஸ்தியையும் அழிவில்லாததென்று நினைத்திருக்கிறாய்? மண்ணினாலும் கல்லினாலும் பிறவற்றாலும் மனிதர்களால் கட்டப்படுகின்ற வீடுகளையும் பொன் வெள்ளி செம்புகளினாற் செய்யப்படுகின்ற நாணயங்களையும், பற்பல வளங்கள் தருகின்ற பூமியையும் இன்னும் இவற்றோடு சேர்ந்த பிறவற்றையுமே நிலையுள்ள வீடும் நிலையுள்ள ஆஸ்தியுமென்று நினைக்கின்றாய்போலும். நண்பனே! இவையெல்லாம் உனக்குநிலையுள்ள பொருள்களாவதெப்படி? நீயோ முன்செய்த வினைவயத்தினால்

இப்பொழுது இவ்வுலகத்தில் பிறந்திருக்கின்றாய். இன்னும் சிலகாலத்துள்ளே அந்த வினை முடிந்து விட்டால் பின் ஒரு கணமேனும் இங்குதரித்திருக்கமாட்டாய். உன் கண்முன்னே எத்தனையோ பெயர் ஆணென்றும் பெண்ணென்றும் அலியென்றும் பிறந்து சில நாளிலே இறந்து இல்லையாய்ப்போய்விடக் காண்கிறாய். அதற்கெல்லாம் காரணமென்ன? அவர்கள் செய்தவினையின் அனுபவம் அவ்வளவுதானிருந்தது. அவரவர்செய்த வினைப்பயன் முடிந்தால் பின் அணுவளவுநேரமேனும் உயிர்த்திருக்க ஒருவராலும்முடியாது. அது பற்றியே "வினைப்போகமே யுறுந்தேகங்கண்டாய் வினைதானொழிந்தாற்—றினைப்போதளவும் நில்லாது" என்றார் பெரியோரும். நண்பனே! இவ்வாறு அழிவு நிகழ்வது உனக்கும் எனக்கும் மாத்திரமன்று. எவராயிருந்தாலும் என்றுபிறப்பிலுற்றார்களோ அன்றேமரணமென்பதும் கூடவே தொடர்கின்றது. "நெருநலுளனொருவனின்றில்லை யென்னும், பெருமையுடைத்திவ்வுலகு" என்றும், மலைமிசைத்தோன்று மதியம்போல்யானைத், தலைமிசைக்கொண்டகுடையர்—நிலமிசைத், துஞ்சினரென்றெடுத்துத் தூற்றப்பட்டாரல்லால் எஞ்சினரிவ்வுலகத்தில்" என்றும் பெரியோர் கூறியிருக்கின்றனர். "இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே" என்றார் தாயுமானவரும். இவற்றால் நம் உலகவாழ்வு பூர்வ வினைக்குத்தக்கவண்ணம் ஒரு சிறுகாலத்தே நிகழ்வதன்றி நிலையுடையதாகாது என்பது நன்றாகவிளங்குகின்றது. ஆகவே உன்வாழ்க்கையே நிலையில்லாதபோது இந்த உலகவாழ்விலுள்ள வீடும் ஆஸ்தியும் உனக்கு நிலையுள்ளதாவதெப்படி? அன்றியும் "பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்து மண்மேல் இறக்கும்பொழுது கொடுபோவதில்லை" என்றபடி இந்த வீடு வாசல் ஆஸ்தி பாஸ்திகளில் ஒன்றையாவது நீ கொண்டுவந்ததுமில்லை; இனிப்போகும்பொழுது கொண்டுபோகப்போவதுமில்லை. ஆகவே இடையிலே சிலகாலம் அவை உனக்கு வினைச்சார்பினாலே வந்தடைகின்றன. ஆதலால், முன்னுவது பின்னுவது உனக்கும் அவைகட்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. இப்படி முன் பின் யாதொரு சம்பந்தமுமற்று இடையிலே சிலநாள் உன்னோடுகூடியிருக்குமவை உன்னுடைய சொந்தப்பொருளாவதெப்படி? அவைகளை நீ அழியாதபடி காப்பது எவ்வாறு? இன்னும்

இடைநின்ற காலத்தே தானும் அவை உனக்குச்சொந்தமாய் இன்பந்தருவனவாய் இருக்கின்றனவா எனப்பார்க்கின், "மண்டனில்வாழ்வும்வானத் தரசயன்பாலார்வாழ்வும், எண்டருபூதபேத யோனிகளியாவுமெல்லாங், கண்டவிந்திரமாசாலங் கனுக்கமுதிர்தங்காட்டி, யுண்டுபோலின்றும்பண்பி லுலகினையசத்துமென்பர்" என்று உண்மைநூல்கள் கூறுவதால் அக்காலத்தும் அவை நிலையில்லாதனவாகவேயிருக்கின்றன. ஆகவே முக்காலத்தும் உனக்கு நிலையில்லாதனவாகக் காணப்படுகின்ற இவைகளை நிலையுடையனவென்று சம்பாதிக்கவும் காக்கவும் அவைகளால் இன்பம் பெறவும் எண்ணுதல் மிகவும் அறிவீனமான காரியமன்றோ? நண்பனே! நீயே நன்றாக யோசித்துப் பார்ப்பின் உனக்கு உண்மை நன்கு விளங்கும்.

ஆனால், பின் நிலையுடைய வீடும் நிலையுடைய ஆஸ்தியும் வேறெவை? இவ்வுலகத்திலே தோன்றி யொடுங்குகிற இப்பொருள்களெல்லாம் மாயாவிசித்திரகாரியங்கள்: இவை தோன்றும்போதே இல்லையென்று சொல்லத்தக்க பரிசினையுடையவைகள். இவற்றால் நமக்கு ஒருபோதும் ஒருசுகமும் ஓர் இன்பமும் உண்டாகமாட்டாது. இது நிற்க. இவ்வுலகங்களனைத்தையும் ஆன்மாக்களின் வினைக்குத்தக்கபடி ஆட்டிவைக்கின்றவரும், நமக்குப்பரமபிதாவும் மாதாவும் குருவும் உறவும் நட்புமாயிருக்கின்றவருமான கடவுள் ஒருவர் நமக்கு நன்மை செய்வதே கருத்தாக எப்பொழுதும் காத்துக்கொண்டிருக்கிறார். அவரோ மாறாதபெருங்கருணையையுடையவர். அவரிடத்தே எக்காலத்தும் அழிவில்லாத தன்மையையுடைய ஓர்வீடும் ஒரு காலத்தும் அழிவில்லாத ஓர் ஆஸ்தியும் இருக்கின்றன. அவ்விரண்டையும் அவர் பிள்ளைகளாகிய நமக்குக்கொடுக்கும்பொருட்டே வைத்திருக்கின்றார். அவை யாவையென்றால், அவருடைய திருவடியே அழியாத வீடு; அவருடைய திருவருளே அழியாத ஆஸ்தி. இவ்விரண்டுமே நித்தியமானவை. இவைகளைச்சேர்ந்தால் நாமும் நித்தியமான வாழ்வைப்பெறலாம். நித்தியமான பேரின்பத்தையும் அனுபவிக்கலாம். ஆதலால் நண்பனே! நீ அதனையே எப்படியாவது அடைய முயல்வாயாக.

மு. திருமாலழகுபிள்ளை.

சவுக்குமரம்.

சவுக்குமரம், ஜலமகப்படக்கூடிய மணற்பாங்கான விடங்களில் விசேஷமாய்ப் பயிரிடக்கூடுமானதாயிருப்பது யாவரும் நன்கறிந்த விஷயமேயாம். விசேஷமான காற்றோட்டமிகுந்த மணற்பாங்கான விடங்கள்தாம், அப்பயிர் செய்வதற்கு யோக்கியமான விடங்களாம். அதற்கு எடுத்துக் காட்டாக மணல் மிகுந்த சமுத்திரக்கரை யோரங்களிலும், ஆற்றங்கரை யோரங்களிலும் இப்பயிர் மிகவும் செழித்துக் கொழுத்துத்தழைத்து வானுறவோங்கி வளம்பெற வளர்ந்திருப்பதை நாம் இன்றுங்காணலாம். இப்பயிர் மற்றெல்லாப் பயிர்களைக் காட்டிலும், மணற்பாங்கான நிலச்சொந்தக்காரராகிற குடியானவர்களுக்கும் பிறருக்கும் மிக்கபலன்றருவதாகின்றது. ஆனால் பயிரிடுவோர், இச்சவுக்குப் பயிர் செய்வதற்கு முன்னால், பணத்தைச் சொற்பமாவது செலவழித்துச் சிலவருஷங்கள் கழிந்த பின்னர் தாமடையப் போகும் பெரும்பலனைப் பொறுமையுடன் எதிர்பார்க்க வேண்டியவராயிருக்கின்றனர். ஆனால் சவுக்குப்பயிர் செய்யும் குடியானவர், அதனால் பெரும்பயனை யடைவது திண்ணம்.

இச்சவுக்கு காற்று நட்ட சொற்பகாலம் வரையில் அப்பயிருடன் எளிதில் சொற்பகாலத்தில் பயிரிடக்கூடிய ஆமணக்குப்பயிர் முதலியன பயிர்செய்து சொற்பலாபம் பெறலாம். இச்சவுக்குப் பயிர் சிறிது தானாகவே தலையெடுத்து ஓங்கி வளர்கிற வரையிலாவது பயிரிடுவோர் அப்பயிருக்குச் சொற்ப நாட்களுக்கோர் முறை தண்ணீர் பாய்ச்சவேண்டியவராயிருக்கின்றனர். அது காரணம் பற்றியே சவுக்குப் பயிரிடுவோர் அது பயிர் செய்த புலங்களில் பலவிடங்களில் ஜலம் ஊறும்படியான ஆழம் வரைக்கும் பூமியில் ஊற்றுத் தோண்டிக் கொள்ள வேண்டியது. அப்படித் தோண்டிக் கொண்டு குடங்கள் கொண்டு அவ்வூற்றினின்றும் ஜலத்தை எடுத்து அருகேயுள்ள செடிகளிற் கொட்டி அவற்றைப் பாதுகாத்தல் வேண்டும். செடிகளை ஆடு மாடுகள் கடித்துக் கேடு செய்யாத வண்ணம் தக்க உயரம் வளருகிற வரை குடியானவன் அவைகளைப் பாதுகாக்காமற் போவனேல் சிறிதும் பயனின்றாம். இவ்வாறான

ஜலசௌகரிய மிருப்பதனுல் சவுக்குப் பயிர் வைத்த கொஞ்ச நாள் வரை சில குடியானவர்கள் அப்புலங்களில் வெண்டை, கொத்து அவரை, தருபூஷணி, வெள்ளரி, கலியாணபூஷ்ணி முதலிய விதைகளைப்போட்டு மிகுதியாய் இல்லாமற் போனபோதிலும் அற்ப பலனை யாவது அடைகின்றனர்.

சவுக்கு நாற்று நட்டபின், தக்க போஷணையும், பாதுகாப்பும் காலந்தவருப் பருவமழைகளும் நேர்ந்தால் ஐந்து வருடங்களில் அச் சவுக்கு மரங்கள் வெட்டி உபயோகப்படுத்த யோக்கியமுள்ளனவாகின்றன. இக்கட்டைகள் கரும்பாலை, பஞ்சாலை முதலியவற்றிற்கு மிகுதியும் உபயோகப்படுகின்றன. இச்சவுக்கு மிகவும் உஷ்ணமானதோர் மரமென்று கருதப்படுகின்றது. பூவரசு, வேல், ஆல், முந்திரி முதலிய மரங்களின் விறகுகளைக்காட்டிலும் சவுக்கு விறகு அதியுஷ்ணமானதேயாம். மற்றைய விறகுகளை அடுப்பிலிட்டுச் சமையல் செய்வதைக்காட்டிலும், சவுக்கு விறகை அடுப்பிலிட்டுச் சமைப்பதனுல் சாப்பாடு வெகு சீக்கிரத்தில் சித்தமாகின்றது. ஆனுல் அவ்விறகினுல் சமைக்கப்பட்ட சாப்பாடு அதியுஷ்ணமானதென்று பல பிரபல வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. சீக்கிரத்தில் சமையலாவதைப்பார்த்து மட்டும் இச்சவுக்கை உபயோகிப்பதனுல், சமையல் பாத்திரங்கள் யாவும் அச்சவுக்கு விறகின் உஷ்ணத்தினைத்தாங்கலாற்ருது மிகுதியான கெடுதியையே அடைவனவாகின்றன. ஆகவே சீமைக்கரியின் பாதி குணத்தைக் கொண்ட சவுக்கைச் சீமைக்கரிக்குப்பதிலாக புகைவண்டிகளுக்கும், பெருத்த ஆலைகளுக்கும் உபயோகப்படுத்துவது வழக்கமாயிருக்கிறது. இத்தகைய ஆலைக்கிராக்கியை நோக்கி நம் குடித்தனக்காரர் இச்சவுக்கைத் தம் நிலத்தில் பயிரிட்டு இலாபமடையப் பிரியப்படுவாராகின்றனர்.

சென்ற சிலகாலந் தொட்டு இச்சவுக்கின் சமூலத்தினையும் நம் மிந்துக்கள் தம்மடுப்பிலிட்டு எரிக்கப் புறப்பட் டிருக்கின்ருர்கள். மொத்தத்தில் சவுக்கின் அடி முதல் நுனி வரையிலுள்ள ஒவ்வோரங்கமும் உபயோகப்படுத்தப் படத்தக்கனவேயாம். சவுக்குச்செத்

தையையும் ஏழைக் குடியானவர்கள் தம்மடுப் பெரிக்க உபயோகப் படுத்துகின்றார்கள். சிறு சுள்ளிகள் கற்றை கற்றையாகக் கட்டப் பட்டு கற்றை இரண்டு பை வீதம் விற்கப்படுவதனால், நெற்றி வேர்வை நிலத்தில் வடியக் காலைமுதல் மாலைவரையில் பாடுபட்டு இரண்டரையணா சம்பாதிக்கும் அநேக ஏழைக் குடியானவர்கள் சுகமடைவாராகின்றனர். கட்டைகள் துண்டு துண்டாக நறுக்கப்பட்டு அநேக விறகுவாடிகளில் குண்டொன்று (50 ராத்தல் ஒரு குண்டு) நான்கணா அல்லது மூன்றேமுக்காலணா வீதமும், அவ்வப்போழ்திய கிராக்கிக்குத் தகுந்தவாறும் விற்கப்பட்டு வருவதனால் ஜனங்கள் அடையும் நன்மைகள் எண்ணிறந்தவையா யிருக்கின்றன. சவுக்கு மரத்தின் காய்கள் ஆப்பக்கடைக்காரிகளுக்கு மிகப் பிரயோஜனமாகின்றன. நெருப்பு அணையாமல் எப்போதும் தழல் ஸ்வரூபமாகக் கணகணவென்று அக்கினிச்சுவாலைவீசிக்கொண்டிருக்குமாறு ஆப்பச் சட்டியின் மேல்மூடியாகிய சட்டியில் நெருப்புடன் இக்காய்களைச் சேர்த்து வைக்கிறார்கள்.

மிக்க ஒழுங்காகவும், யாதொரு கோணல் முதலியனவின்றியும் இச்சவுக்குச் சுமார் 60 அடி உயரமும் சிற்சில சமயங்களில் 70 அடி உயரமும் வளர்வதனால் இவற்றை ஜனங்கள் பல அருமையான வேலைகளுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள். இம்மரத்தைப் பெருங் கட்டிட வேலைகளுக்கென்று ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் குடியானவர்கள் வெட்டத் தொடங்குகின்றார்கள். அவ்வாறு அம் மழைக்காலங்களில் வெட்டுவதனால் இம்மரங்கள் பின் உளுத்துப் போகாதிருக்குமென்று கருதப்படுகின்றது. இச்சவுக்கு மரத்தில் கீல் மிகுதியும் பூசி, வீடுகள் கட்ட உபயோகிக்கின்றார்கள். இம்மரங்களின் உதவி கொண்டு நிருமிக்கப்பட்ட வீடுகள் முதலியன பல வருடங்கள் செல் முதலியவை ஏறுமல் நல்லநிலைமையிலிருந்து வருவதை நாம் அனுபவத்திற் கண்டிருக்கிறோம். நம் பத்திரிகை நேயர்களும் அனுபவத்தில் அறிந்திருப்பார்களென்றே நம்புகின்றோம். ஒழுங்காய் வளர்ந்த இம்மரங்களைப் பெரிய கொட்டாரங்கள், அழகான கலியாணக் கூடங்கள் இவை போல்வன பிறவும் ஒழுங்காய்க் கட்டப் படப் பெரிதும் பயன்படுவதாகின்றது. சவுக்குத் தோப்பிலிருந்து அதை வெட்டி யெடுத்து விற்பனை செய்த பிறகு, அதன் வேரையும்

மிக்க சிரமத்துடன் வெட்டி யெடுப்பதனுல் அவற்றை விற்று நல்ல இலாபத்தையும் குடியானவர்கள் அடைந்துவிடுகிருர்கள். நன்ருகக் காய்ந்த சவுக்கு வேர்களும் அடுப்பெரிக்க உபயோகிக்கப்படுவதனு லும், அவ்வேர்கள் சவுக்கு மரங்களைக் காட்டிலும் மிகவும் மலிவா கக் கிடைப்பதனுல் ஏழைக் குடியானவர்கள் நன்மையை யடைகின் ருர்கள். இவ்வாறு இச்சவுக்கினுல் இக்காலத்திலடையும் நன்மை கள் அநேகம். இம்மரப்பட்டையும் ஒருவகைச் சாயம் எடுக்க உப யோகப்படுகின்றது. கடற்கரை யோரத்தில் இச்சவுக்குப் பயிர் மிகுதியாய் இருப்பது பற்றி, அக்கடற்கரை யோரத்திலுள்ள வலையர் கள் இவற்றின் பட்டைகளை இலகுவாய் அடைந்து அவற்றைச் சலத் தில் ஊறப்போட்டுத் தம்முடைய பெருத்த மீன் வலைகளுக்கு ஒரு விதமான சாயம்ஏற்றுகிருர்கள். அவ்வாறு ஏற்றுவதனுல் அவ்வலை கள் மிக்க வலிமையாகவும், பார்வைக்குப் பளபளப்பாகவு மிருக்கின் றன. இப்பட்டைகளின் குணுகுணங்களை நன்கறிந்த மேனுட்டினர் இப்பட்டைகளினின்று ஒருவித சாயம் எடுத்து உலகினர்க்குப் பய ன்படுத்தக் கருதி நம் நாட்டினின்றும் அப்பட்டைகளை ஏற்றிக் கொண்டு போகின்றனர். அம்மேனுட்டினர் இப்பட்டைகளி னின்றும் ஒரு வித சாய மெடுத்து அதற்குத் தக்க வேறு வகை மாற்றுக்கள் சேர்த்துக்காக்கி (Kaki) என்றதோர் சாயம் உண்டுபண் ணுகிருர்கள். இப்போது நம் நாட்டில் நமச்குச் சீமையினின்று ஏற்றுமதியாகிக் கிடைக்கும் (Kaki Drill) டிரில்லினுடைய சாய மும் இச்சவுக்குப்பட்டைச் சாயமே யென்று கொள்ளல் வேண்டிய தாகின்றது. இத்தகைய சாயம் வாய்ந்த சவுக்குப் பட்டையின் மகிமையும் கொஞ்சகாலமாக நம் நாட்டிற் பரவாது குறை வடைந்து வருகின்றது. சீக்கிரத்தில் அப்பட்டைகள் நம் பாகங் களிலிருந்தும் ஏற்றுமதியாகும் போலக் காணப்படுகின்றது. அவ் வாறு அப்பட்டைகள் ஏற்றுமதி செய்யக் காலம் வருமானுல், சவுக் குக்குப்பின்னும் அதிக கிராக்கியும் ஏற்பட்டு மணிலாப்பயிரை மனி தர் அடிக்கடி பயிர் செய்யப் பாடுபடுவது போன்று நாடு முழுதும் சவுக்குப் பயிர் மயமேயாகி எங்குப்பார்த்தாலும் சவுக்குத் தோப் பையே பார்க்கலாகும். இப்போது அதன் உபயோக மறியாது பட் டைகளை அடுப்பெரிக்கும் வழக்கம் போய் சவுக்குப்பட்டை பொன்

னுக மதிக்கப்பட்டுப் போற்றப்படும் என்பதற் கையமே யின்று. நிற்க, சவுக்கு மரத்தின் செத்தை இன்னும் ஓர் அரிய விஷயத்திற் குபயோகப்படுத்தப்படுகின்றது. இச்சவுக்குச் செத்தையைக் களர் நிலத்தில் இரண்டடியுயரம் நெருக்கிப் பரப்பி அடிக்கடி தண்ணீரை வற்றுதிருக்கும்படி பாய்ச்சி வந்தால் களர் நிலம் முழுவதும் மாறிப் பயிரிடுவதற்கு உபயோகப்படுவதாகின்றது. நிலப்பரப்பில் அச் செத்தைகளைப் பரப்பி அவை நன்ருக அழுகி மட்கி மண்ணோடு மண்ணாய்க் கலந்து போகும் வரையில் சிறிது நேரமேனும் அத் தகைய நிலத்தில் தண்ணீர் வற்றுதிருந்தால் தான் நிலத்தின் களர் திருந்தி நல்ல பயிரிடத்தகுந்த நிலமாகும், அல்லாக்கால், அச்செத் தையின் உஷ்ணமே நிலத்தைக் கெடுத்துவிடவுங் கூடுமெனச் சொல்லப்படுகின்றது. தண்ணீர் வற்றுமல் சவுக்குத்தழை போட்டு மட்கின களர் நிலத்திலிருந்து மாறிய நல்லநிலத்தில் நெல் மணிகளும் மிகுதியாகப்பிடிப்பதாகவும் மதிக்கப்படுகின்றது.

வாணி விலாஸினீ.

கம்பராமாயணம்.

—:0:—

சுந்தரகாண்டம்.

இராமாயணமென்பது இதிகாசம். இதிகாசமென்பது பழையகாதை மேற் கூறப்படுவது. அது தொலெனப்படும். இராமாயணமென்பதிரண்டு சொல்லாய் இராமனுக்கிருக்கையெனப் பொருள்படுவதேனும், வைதிகராற் பண்டைக்காலந்தொட்டுப் பாராயணஞ் செய்யப்பட்டுவருவதனுல் ஸ்ரீமத்தெ ன்னுமடைமொழி கொடுத்து வழங்கப்படும். அது 'படிகொண்ட கீர்த்தி யிராமாயணமெனும் பத்திவெள்ளம்' எனக்கூறலானுமுணர்க. இனி இவ் விதிகாசஞ் சிறையிருந்தாளேற்றங் கூறப்படுவதாக விஙிராமஸம்பந்தமான அயனமெனக்கொண்டிராமாயண மெனக்கோடலுமிழுக்காது. இவ்விதிகாச ம்இராமாயணபுருடர்கள் தோற்றங்கூறலாற் பாலகாண்டமென்றும், அவரை அயோத்தியை முடிபுனையத் தயரதன் வேண்டலுந் துறத்தலுங் கூறலான் அயோத்தியாகாண்டமென்றும, அவர் வனசஞ்சாரிகளாக வசித்தமை குறி த்தலான் ஆரணியகாண்டமென்றும், அவர் வாலியைக்கொன்று சுக்கிரீவ னுக்கரசளித்தமையாற் கிட்கிந்தாகாண்டமென்றும், இராவணவதமுதலி

யன கூறலான் யுத்தகாண்டமென்றும்; அவர் அயோத்தியையடைந்தபின் னடந்தமை குறித்தலான் உத்தரகாண்டமென்றும் காண்டமுறைமை கூறினரேனும், பிராட்டிசரிதமுமவளைத் தேடிச்சென்ற அனுமான்சரிதமும் விரவியிருத்தலானழகு செய்யும் பெற்றிமை நோக்கிச் சுந்தரகாண்டமென்றார். இனி அனுமானுக்குச் சுந்தரனென்னும் பெயர்பற்றி அவரிலங்கையிற் றன்னுலுணர்த்தினமையா னங்ஙனங்கூறினரெனவுமமையும்.

முதலாவது
கடலுருவுபடலம்.

அனுமான் மகேந்திரமலையிலிருந்து அங்கதன் நீலன் சாம்பனென்பார் வேண்ட இலங்கையையடையுநோக்கமாக அவர் அக்கடலைத் தாவிய செய்தியையுணர்த்தலினவ்வாறு கூறினர். படலமுறைமையுமிதனுனே விளங்கும்.

காப்பு.

அலங்கலிற்றோன்றும்பொய்ம்மையரவெனப்பூதமைந்தும்
விலங்கியவிகாரப்பாட்டின்வேறுபாடுற்றவீக்கம்
கலங்குவதெவரைக்கண்டாலவரென்பகைவிலேந்தி
இலங்கையிற்பொருதாரன்றேமறைகளுக்கிறுதியாவார்.

(இ - ள்.) மாலைக்காலத்தில் மாலையின்கண்டோன்றும் பொய்ம்மையாகிய அரவமேபோலப் பூதங்களைந்தும் விலங்கினின்ற விகாரப்பாட்டினுல் வேறுபாடடைந்த மிகுதி யாவரைக் காண்டக்காற் கலங்காநிற்பதவரே கையில்வில்லையேந்தி இலங்கையிற் பொருதாருமறைகட்கிறுதியாவாரு மெனக் கூறுவர் எ - று.

குறிப்பு.—மாலைக்காலத்து மாலையாவென்றது பிராந்தியையாகலின் அலங்கலிற் றோன்றும் பொய்ம்மையரவென்றதென்க. பூதமைந்தென்றது நிலநீர் நெருப்புயிர்நீள்விசும்பென்பவற்றினை. உம்மைமுற்று. பூதமைந்தும் விலங்கியவிகாரப்பாட்டின் வேறுபாடுற்ற வீக்கங்கலங்குவது இராமனைக்கண்டன்றேயாகலாற் கலங்குவதெவரைக் கண்டாலவரென்றும், அவரே மறையந்தமாவாரென்பார் மறைகளுக்கிறுதியாவாரென்றும், இது வேயான்றோர் துணிபென்பார் என்பவென்றுங் கூறினர். கைவிலேந்தியிலங்கையிற் பொருதாரென மேலைக்காண்டத்துக்குத் தோற்றுவாய் கூறியபவாறென்க. வில்லென்றது கோதண்டத்தை: அவனுரத்திற்கேயீடல்லாத வில்லேந்தலாற் சிறுவில்லேந்தியென்னும் பொருள்படக் கைவிலேந்தியென்றதென்க. இலங்கையிற்பொருதார் மறைகளுக்கிறுதியாவாரென்பன ஒரு பொருண்மேற் பலபெயர் வந்தன. அன்றேயசைநிலை. என்ப பலவீற்றுப் பலரறிவினைமுற்று.

நூல்.

1. ஆண்டகையாண்டவ்வானோர் துறக்கநாடருகர்கண்டான்
ஈண்டிதுதான்கொல்வேலையிலங்கையென்றையமெய்த
வேண்டருவிண்ணாடென்னுமெய்ம்மைகண்டுள்ளமீட்டான்
காண்டகுதோகையும்பரில்லெனக்கருத்திற்கொண்டான்.

இ-ள். ஆண்மையிற் சிறந்த அனுமான் தேவர்கள் துறக்கவுலகையருகேகண்டு இங்கிதுதானோ கடல்சூழ்ந்த இலங்கையென்றையமடைந்து வேண்டுவார் வேண்டுவநல்கும் விண்ணுலகமென்னுமுண்மையை யுணர்ந் துள்ளத்தை மீட்டுக் காணத்தகுந் தோகைபோல்வாளாகிய சனகியை விண்ணின்கணில்லையென்று மனத்திற்கொண்டனன் எ-று.

ஆண்டகை அன்மொழித்தொகை. கண்டான் மீட்டானென்பன எச்சமுற்று. வேலை, உள்ளம், தோகை, கருத்தென்பன ஆகுபெயர்கள். கரிய கோலத் திருவுருவப்பெருந்தகையாகிய இராமபிரான் கார்காலமேகத்தையொப்பவனாகலினவனைத் தன்பலகண்களானு நாடுமியல்புடையளாகலின்காண்டகுதோகையென்றுவமைமுகத்தாற் கூறினாரன்றிச் சம்பாதியாற்கடனடுவணிலங்கையென் றையமெய்தாவென்றும், விண்ணிடையிலங்கையிருக்கப் பெறாமையான் மெய்ம்மைகண்டுள்ள மீட்டா னும்பரில்லெனக் கருத்திற் கொண்டானென்றும் கூறினார். பஞ்சதரு, சுரபி, சிந்தாமணிமுதலிய வேண்டுவார் வேண்டும்பொருள்களை விண்ணாடெய்தப் பெற்றமையான் வேண்டருவிண்ணாடென்றதென்க. நாடென்றது கிளை.

9. தாரகைசுடர்கள்மேகமென்றிவைதவிரத்தாழ்ந்து
பாரிடையெழுந்துநின்றபடர்நெடும்பனிமாக்குன்றம்
கூருகிர்க்குவவுத்தோளான்கூம்பெனக்குமிழிபொங்க
ஆர்கலியுலகத்தாழுங்கலமெனலாயிற்றன்றே.

இ-ள். நாள்கள் கோள்கள் மேகமென்ற இவையொழியத் தாழ்ந்து நிலத்திலெழுந்துநிற்கின்ற படர்ந்த நெடிய பெருமலை கூரிய நகத்தையும் குவிதலையுமுடைய தோளையுமுடைய திருவடி கூம்பென்று சொல்ல நீர்க்குமிழி பொங்க கடல்சூழ்ந்த வுலகத்தமிழுமரக்கலம் போலாயிற்று எ-று.

குறிப்பு.—தாரகை என்றது வடமொழிச் சிதைவு; நாள்களை, சுடர்களென்றது சூரியன்முதலிய கோள்களை. மேகமென்றது முகிலை. ஈண்டவை அம்மண்டலங்களையுணர்த்தி யாகுபெயராயின. என்ற என்னும்பெயரெச்சத்தீறு தொகுத்தல்பெற்றது. மணிமாக்குன்றமென்றது மகேந்திர

வரையை. அக்குன்று மரக்கலமாகவும், திருவடிகள் கூம்பாகவுமுருவ கஞ்செய்யப்பட்டன. பாராகுபெயர், ஆர்கலியன்மொழித்தொகை, அன்றே அசைநிலை. கடலிலாழுங் கலமெனக்கூறுததனெடு வேற்றுமைதோன்ற வுலகத்தாழுங் கலமெனலாயிற்றென்றார். கூருகிர்க்குவவுத்தோளானென்றதநுமானே. இதனாற் பாரிலமுழுந்துகின்ற பனிமாக்குன்ற முலகத்தாழுங் கலமெனலாயிற்றென் றுவமைமுகத்தாற் கூறியவாறென்க.

20. மாவொடுமரனுங்கல்லும்வல்லியுமியாவுமற்றும்
போவதுபுரிந்தவீரன்விசையினாற்புணரிபொங்கத்
தூவினகீழுமேலுந்தூர்த்தனசுருதியன்ன
சேவகன்சீருமுன்னஞ்சேதுவுந்தெரிந்தமாதோ.

இ-ள். இலங்கையிற் போக்கைவிரும்பிய திருவடிசெல்லும் வேகத்தாற் கடல்கொந்தளிப்ப விலங்குகளு மரங்களுங் கற்களும் கொடிகளும் பிறவுமனைத்தும் தூவிக் கீழுமேலுந் தூர்க்கப்பட்டன; வேதங்களையொத்த ஆண்டகை சீருமுன்னே சேதுவுங் காணப்பட்டது எ-று.

குறிப்பு.—போவதுபுரிதல்-இலங்கையை நாடிச்சேறல். போதலில் விலங்கு மாமுதலியவை அம்மலையினின்று இவன்செல்லும் விசையாற்றூர்க்கப்பட்டனவாகத்தோன்றலின் இனிச் சேதுபந்தனஞ் செய்வதற்கு முற்பட்டே அது தோன்றுதற்கிடங்காட்டியவாறென்க. சுருதியன்னசேவகனென்றார் வேதங்களெல்லாந்துணிந்துகூறுவதிவன் செய்கையாகலினென்க. இதனை முற்காண்டத்து 'விராவரும்புவிக்கெலாம்வேதமேயன-இராமனைப்பயந்தவெற்கிடருண்டோ' எனக் கைகேசி கூற்றாகக் கூறலானுமுணர்க.

29. தடக்கைநாலைந்துபத்துத்தலைகளுமுடையான்றானே
அடக்கியைம்புலன்கள்வென்றதவப்பயனறுதலோடுங்
கெடக்குறியாகமாகங்கிழக்கெழுவழக்குநீங்கி
வடக்கெழுந்திலங்கைசெல்லும்பரிதிவானவனுமொத்தான்.

இ-ள். தடங்கைகளிருபதுடன் பத்துத்தலைகளையுமுடைய இராவணனே ஐம்புலனடக்கி வென்ற தவப்பயன்முடிதலும் உற்பாதமாக வானின் கண்கிழக்குநின்று மெழுகின்ற வழக்கொழிந்து வடக்கணின்றெழுந் திலங்கையை நோக்கிச்செல்லுஞ் சூரியனையொத்தான் எ-று.

குறிப்பு.—தசக்கிரீவனென்னும் பெயர்பற்றிப் பத்துத்தலைகளுமுடையானென்றார். திருவடி வடதிசையினின்று இலங்கைக்குச் சேறல் உற்பாதமாகச் சூரியன் செல்வதாக உவமித்தார். இராவணன் ஐம்புலன்கள்வென்று

செய்ததவப்பயனறுதலு மிவ்வுற்பாத நிகழ்ந்ததாகவுணர்த்தினமைகாண்க. கெடக்குறி-உற்பாதம். இவன் சேறலாற் போரிலிராவணனிறப்பது திண்ணமாகலிற் கெடக்குறியென்றதென்க. இது தற்குறிப்பேற்றம். பரிதிவானவன் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. பரிதி ஆகுபெயர்.

30. புறத்துற லஞ்சி வேறோ ரரணம்புக் குறைதல்போக்கி
மறத்தொழி லரக்கர்வாழு மாநகர் மனுவின்வந்த
திறத்தகை யிராமனென்னுஞ் சேவகற் பற்றிச்செல்லும்
அறத்தகை யரசன்றிண்போ ராழியு மனையனானன்.

இ-ள். புறத்தே அடைவதனை யஞ்சி வேறோராரணத்தை யடைந்து வசித்தலைப்போக்கிக் கொடுந்தொழிலையுடைய அரக்கர்வாழ்கின்ற பெரிய நகரில் மனுவின் வழிவந்த ஆற்றலையுடைய இராமனென்னு மாண்டகையைத் துணையாகக்கொண்டு செல்லுமறத்தகை யாசன்றிண்ணிய போர்த்தொழிலையுடைய சக்கரமனையனுயினான். எ-று.

குறிப்பு.—தேவரையிடுக்கண்செய்ததற்கலகிலையாகலின் மறத்தொழிலரகரென்றும், திருவடிஅம்மாநகரிடை இராமனென்னுஞ் சேவகனைத்துணையாகப்பற்றிச் சேறலையறத்தகையரசன் றிண்போராழி யென்றுங்கூறினர். புறத்துறலஞ்சி என்புழி 'அச்சக்கிளவிக்கைந்துமிரண்டு-மெச்சமிலவேபெயர்வயினான' என்பதனானிரண்டாவதேயன்றி அடைவதினஞ்சியென ஐந்தாவது விரிப்பினுமமையும். இராமன் மனுவின்வழித்தோன்றலாகலின் மனுவின் வந்த திறத்தகையிராமனென்றதென்க. மனுவென்றது சுவாயம்புமனுவை; அவன் சூரியன் மைந்தனென்க. இராமனெனபது கண்டாராற்றுவக் குண்ணப்படுங் கட்டழகுடையானென்ப. தனை: 'இதனை ஆடவர்பெண்மையை யவாவுந்தோளினாய்' என முற்காண்டத்திற் கூறலானுமுணர்க.

34. விளித்துப்பின் வேலைதாவும் வீரன்வால்வேத மெய்க்கும்
அளித்துப்பின் னநுமனென்னு மறந்துணை பெற்றதாயும்
களித்துப் புன்றொழின் மேனின்ற வரக்கர் கண்ணுறுவிரா
றெளித்துப்பின்செல்லுங்காலபாசத்தையொத்ததன்றே[மென்.

இ-ள். கூவிப் பின் கடலைத்தாவுகின்ற திருவடிவால் வேதவுண்மையை யுதவிப்பின் அனுமானென்னு மறமாகிய துணையினையடைந்ததாயுங் களிப்படைந்து புன்றொழின்மேனின்ற வரக்கர்காண்பரென்றெண்ணிக் காந்துபின் செல்லுகின்ற யமபாசத்தை யொத்தது. எ-று.

குறிப்பு.—வேலை ஆகுபெயர். அரக்கர் காண்பரென்று காலபாசமிலங்கையிற் செல்லவஞ்சி அனுமானென்னு மறக்கடவுளை துணைபற்றிச்சென்றதெனவாலொடு செல்வதற்குவமை கூறினர். புன்றொழிலென்றது தேவர்க்கிடுக்கண் செய்தலை. காலபாசமென வுயர்திணைப்பெயரீற்று னகரங்கெட்டது. மெய்க்குமென நான்காவு திரண்டாவதன்பொருளது.

40. இந்நாக மன்ன னெறிகாலென வேகும்வேலை
திந்நாகமாவிற் செறிகீட் டிசைக்காவல் செய்யும்
கைந்நாக மந்நாள் கடல்வந்துழி காட்சிதோன்ற
மைந்நாக மென்னு மலைவானுற வந்ததன்றே.

இ-ள். இக்களிறு போல்வான் வீசுங்காற்றுப்போற் செல்லுமமையத்துத் திசையானைகளிற் பொருந்திய கீழ்த்திசையைக் காவல்செய்யுங் கையையுடைய களிறு அமுதங்கடைந்த அந்நாள் கடலிற்றோன்றிய தோற்றம்போலமைந்நாகமென்னு மலைவானளாவத் தோன்றியது எ-று

குறிப்பு:—இந்நாக மன்னனென்பதனுமானை, திக்குநாகமென்றது திந்நாகமெனச் சிதைந்து நின்றது. கீழ்த்திசையென்பது மரீஇயது. நாகமென்பது பலபொருளொரு சொல்லேனுமீண்டுக் கையென்ற அடையான் யானையையுணர்த்திற்று; அஃதுஐராவதத்தை அந்நாள் கடல்வந்துழிகாட்சியென்றது தேவர்களமுதம்பெறக கடல்கடைந்த ஞான்று சிந்தாமணி, சுரபி பஞ்சதரு, உச்சைசிரவமுதலியவற்றொடு நாற்கோட்டும்பலுந்தோன்றலினங்ஙனங் கூறியதென்க. மைந்நாகமென்பது இந்திரன் மலைகளின் சிறகையரிந்த ஞான்று வாயுவின்றுணையாற் கடலிலொளித்ததொருவரை; வானுற வந்தது உயர்வு நவிற்சியணி.

51. கொடுநா லொடிரண்டு குலப்பகை குற்றமூன்றும்
சுடுஞானம் வெளிப்பட வுய்த்ததுயக்கிலார் போல்
விடநாக முழைத்தலை விம்மலுழன்று நீங்க
நெடுநாள் பொறையுற்ற வுயிர்ப்பு நிமிர்ந்து நிற்ப.

இ-ள். கொடியதாகிய அறுவகைச்சிறந்த பகையு முக்குற்றமு மகற்றினைக் கெடுக்கு மெய்யுணர்ச்சி வெளித்தோன்றச் செலுத்திய பந்தநீங்கினர் போல, விடத்தையுடைய பாம்பு முழையிடத்துத் துன்பத்தாலுழன்றொழியப் பலநாள் பொறையடைந்த வுயிர்ப்போங்கி நிற்ப. எ-று.

குறிப்பு:—அறுபகையாவன:—காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனப்பட்டவற்றினை. அஞ்ஞானமாய அவிச்சையும், அது

பற்றி யானென மதிக்கு மகங்காரமும், அதுபற்றி எனக்கிதுவேண்டுமென்னுமவாவும், அதுபற்றி அப்பொருட்கண் செல்லுமாசையும், அதுபற்றி அதன்மறுதலைக்சட் செல்லுங்கோபமுமென வடநூலார் குற்றமைந்தென்ருர். அவற்றுள் அகங்காரமவிச்சைக்கண்ணும், அவாவுதல் ஆசைக்கண்ணு மடங்குதலானிவர் குற்ற மூன்றென்ருர். அவ்வறுபகையுங் குற்றமூன்று மெய்யுணர்ச்சிதோன்றிய வழியில்லையாகலிற் சுடுஞானம் வெளிப்பட வுய்த்ததுயக்கிலாரென்ருர்.

61. முன்பிற்சிறந்தா ரிடை யுள்ளவர் காதன்முற்றப்
பின்பிற் சிறந்தார்குண நன்றிதுபெற்ற யாக்கைக்
கென்பிற் சிறந்தாயதோ ரூற்றமுண் டென்னலாமே
அன்பிற்சிறந் தாயதோர் பூசனையார்க ணுண்டே.

இ-ள். முன்னர் குடிப்பிறப்பிற் சிறந்தாரிடத்து அவ்வழிக்குடிப்பிறப்பிற் சிறந்தார் ஆசைமீதூரப்பின் பின்சிறந்தார் குணநன்று; இக்குடிப்பிறப்பினைப்பெற்ற வுடம்பிற் கென்பிற்சிறந்தோ ரூற்றமுண்டென்று கூறப்படுமோ, அன்பினுஞ் சிறந்ததோர் பூசனையார்பாலுண்டு. எ-று.

குறிப்பு:—உடம்போடியைந்தல்ல தன்புசெய்யலாகாமையிற் பெற்ற யாக்கைக்கென்பிற் சிறந்ததாயதோரூற்ற முண்டென்னலாமே என்றும் அதுவுமன்பில் வழிநடவாமையினன்பிற் சிறந்ததாயதோர் பூசனையார்கணுண்டே யென்றுங்கூறினுர். சிறந்ததாயதென்பன ஈறுதொகுத்தல் பெற்றன. ஊற்றமென்ப தான்றுகோலே; அஃது உடம்பிற்கு என்பினைப்போற் சிறந்தவுறுப்பின்மையின் என்பிற்சிறந்த வூற்றமென்ருர்.

65. வாளொத் தொளிர்வா லெயிறாழின் மருங்கிமைப்ப
நீளொத் துயர்வாலின் விசும்பு நிரம்பு மெய்யன்
கோளொத் தவன்மேனி விசும்பிரு கூறுசெய்த
நாளொத் ததுமேலொளி கீழிருளுற்ற ஞாலம்.

இ-ள். வாளையொத்துவிளங்கும் வெண்மையாகிய வளைந்த பலமுறையாசப் பக்கத்தேவிளங்க நீட்சியாலொத்துயர்ந்த வாலினுல் விசும்புநிரம்பிய மெய்யையுடையான். வல்லமையுமுடையான் உடம்பு விண்ணிருகூறுபடுத்த நாளினையொத்ததாதலின் உலகம்மேலே யொளியுங்கீழே யிருளுமுற்றன. எ-று.

குறிப்பு:—வாளத்தொளிர்வா லெயிறென்பது வளைந்த பல்லினை நீட்சியென்பதெத் துணையோ அத்துணைநீட்சியு மாற்றலென்ப தெத்துணையோ

வத்துணையாற்றலுமுடையாமையான் வாளத்தொளிர் வாலெயிறென்றும், கோளொத்தவனென்றுங் கூறினார். இவன்வால் விசும்புசிரம்பலான் மேலொளியுங் கீழிருளுமுற்றமை நோக்கி விசும்பிருகூறுசெய்த நாளொத்ததென்றதென்க.

85. சாகா வரத்தலைவ ரிற்றிலக மன்னான்
ஏகா வரக்கி குடற்கொண் டுடனெழுந்தான்
மாகா லசைப்ப வடமண்ணி லுறவாலோ
டாகாய முற்ற கதலிக் குவமை யானான்:

இ-ள். சாகாதவரம்பெற்ற தலைவரிற் றிலகம்போல்வானாகிய அனுமான் அரக்கி குடரினைச்சென்று கைக்கொண்டுடனே யெழுந்தனன், அது பெருங்காற்றசைப்பதனாற் குடர் மண்ணின்கணுற வாலோடாகாயத்தை யடைந்த கறங்குபோல்வானாயினான். எ-று.

குறிப்பு:—அசுவத்தாமா, மாவலி, வியாதன், அனுமான், வீடணன், கிருபன், பரசுராமனென்பா ரென்றுமுள்ளாரென்னப்படு பலராதலிற் சாகாவரத்தலைவரினென்றும், அவரிலிவன் சிறந்தானாகலின் றிலகமன்னானென்றும், அவள்வா யகம்புக்குக் குடர்கொண்டெழுந்தமை மாகாவசைப்பவட மண்ணிலுறவாலோ டாகாயமுற்ற கதலிக்குவமையானானென்றுங்கூறினார். கதலி-கறங்கு காற்றாடி ஒருபொருட் பன்மொழி. இதனைக் 'கறங்கோலை' என்பதுமிப் பெற்றிநோக்கியென்க. அரக்கியென்பதங்காரதாரையை; இதனை 'அங்காரதாரை பெரிதாலாலா மன்னா' னென்பதனானறிக.

92. மண்ணடி யுற்றுமீது வானுற வரம்பின்தன்மை
எண்ணடி யுற்றகுன்றத் தலத்திருந் தெய்தநோக்கி
விண்ணிடை யுலகமென்னு மெல்லியன் மேனிநோக்கக்
கண்ணடி வைத்ததன்ன விலங்கையைத் தெரியக்கண்டான்.

இ-ள். நிலத்தடியினூன்றி மேலே வானிற்பொருந்த வரம்பின்மை எண்ணுதலமைந்த குன்றத்திடத்திருந்து பொருந்த நோக்கி விண்ணுலகமென்னு மென்மையாகிய இயலினையுடைய பெண்ணின்மேனியை நோக்கக் கண்ணடிவைத்தாலொத்த இலங்கையைத் தெரியக்கண்டனன். எ-று.

குறிப்பு:—கடலின்கணிலங்கையிருப்பது விண்ணுலகமென்னும் பெண் தன் மேனிநோக்கக் கண்ணடிவைத்ததுபோ லிருப்பதெனத் தோன்ற வேதுவுவமைமுகத்தாற் கூறினார். கண்ணடி, கண்ணாடி, ஆடி என்பன வொருபொருட் பன்மொழி. எண்ணடிவைத்தல்-எண்ணுதல், மெல்லியல்

அன்மொழித்தொகை. குன்றமென்றது மகேந்திரமலையை; இவ்வனுமான் மோட்டுருக்கொண்டகாலத்து அவரைப் பொருதுநிலத்திலழுந்தலின் மண்ணடியுற்று மீதுவரம்பிறவானின் றன்மையென்றும், அது நினைக்கத்தக்கவரையாகலின் எண்ணடியுற்ற குன்றத்தலமென்றும் இலங்கை கடனடுவெண் தோன்றுவது விண்ணிடையுலகமென்னு மெல்லியன் மேனிநோக்கக் கண்ணடிவைத்தன்ன விலங்கையைத் தரியக்கண்டானென்றுங் கூறினர்

கடறவுபடல மூற்றிற்று.

ஒரு பண்டிதர்.

சைவசித்தாந்தம்.

(முன் தொடர்ச்சி.)

இனி உலகிற்கு முதற்காரணமெனப்படும் அசுத்தமாயையானது, நித்தியமாய், அருவமாய், ஒன்றாய், உலகம் உண்டாதற்கு ஓர்விதையாய், சடமாய், வியாபகமாய், முதல்வனுக்கு ஓர் பரிக்கிரகசத்தியாய், தனுகரண புவனபோகங்களாக விரிந்ததோர்மலமாய், ஆன்மாக்களையெல்லாம் கன்மத்தாற்பந்திப்பதாய், தன் காரியமுகத்தான் ஞானக்கிரியைகளை விளக்குமாயினும் மயக்குவதாயிருக்கும். மாயையென்பதின் பொருள் யாதெனில், மா என்பது ஒடுங்குதல், யா என்பது வருதல், ஆகலின், எல்லாக்காரியங்களும், தன்பால்வந்து ஒடுங்குவதற்கும் தன்கணின்று தோன்றுதற்கும் காரணமாய் நின்றது என்க. ஆதலால் ஒன்றற்கொன்று நுண்ணிதிற்செல்லுஞ்சூக்குமங்கட்கு முடிவிடமாய் நின்ற சூக்குமப்பொருள் யாதோ அதனை மாயையென்றலே பொருத்தமுடைமையெனவறிக, என்றார் சிவஞானமாபாடியகாரர். இந்த மாயை ஒன்றே. அனேகமென்பதற்குப்பிரமாணமில்லை. மூலகாரணமாதலால் நித்தியமென்று சொல்லப்படும். அநித்தியமாகில், பிரளயகாலத்தில் கன்மங்களுக்கு ஆசிரயமில்லாமற்போகும். அவற்றிற்கு விந்து ஆசிரயமாகாது. அந்தக்கன்மத்திற்கு வேறுகையால், ஆன்மாக்களும் ஆசிரயமாகா, சடமாய்ப்போகவேண்டிவருமாதலால் மாயாகாரியமெங்குந்தோன்றுகின்றமையால், அது வியாபகமாகும். அப்படியே மிருகேந்திரமுதலிய ஆகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. இந்த மாயை விசித்திரமானகாரியங்களை உண்டாக்குகின்றபடியால் விசித்திர சக்தியுள்ளது. அனுத்மாவான் தேகாதிகளில் ஆத்மப்பிரமத்தையுண்டாக்குகின்றபடியால் மோகினி

யென்று கூறப்படும். இது சகலர்கள் எல்லாருக்கும் சாதாரணமாயும் பிரளயத்தில் லயமடைந்த தேகமுள்ளகர்மிகளுக்குச் சிருட்டிகாலத்தில் சூக்கும தூலதேகங்களைத் தோற்றுவித்தற்காரணமாயுமிருக்கும். இது வஸ்து ரூபமான பிரபஞ்சத்திற்குக் காரணமாகையால் வஸ்து ரூபையாகும். இப்படிப்பட்ட மாயையினின்றும் காலதத்துவந்தோன்றி முதல்வன் ஆணையால் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என முத்திறப்பட்டு, தோற்றம், நிலை, இறுதி, யென்னும் முத்தொழிலுடைய தனக்குக்கீழுள்ள உடலும் உலகுமாகிய காரியப் பிரபஞ்சம் அனைத்தையும் காலவயைறையிற்படுத்தி, கன்மத்தை வரைசெய்து நிற்கும். நியதிதத்துவம், அக்காலத்தின் பின்னாக மாயையினின்றுந்தோன்றி, முதல்வன் ஆணையால், அவரவர் செய்த கன்மம் அவரவரேநுகருமாறு நியமிக்கும். ஆனால் ஒருவர் செய்த பலன்களை ஒருவர்புசிக்கக் காண்கின்றோமென்னில் யாகத்தில் இருத்துவிக்குக்கள் செய்த கருமபலத்தை யஜமான் புசிக்குமாறுபோல ஏவினவன் தொழில்செய்தவனுடைய பலத்தைப் புசிப்பன். அவ்வாறு ஏவினவனும் ஏவல் செய்தவனுமன்றி ஒருவன் தனதென்று பண்ணின கருமபலத்தை யின்னொருவன் புசிக்ககாண்கின்றோமெனில் அதுவும் பூருவசென்மசம்பந்தமன்றி வராதென்க. சங்கை. ஈசுவாசத்தியே நியமனத்தைப்பண்ணலாகாதோ, நியதிதத்துவமூலமாகப்பண்ணுவது யாது காரணமெனின் ஈசுவரசத்தி நின்மலையாகையால், நியதிமூலமாகவன்றித் தானே பண்ணும்பொழுது, அது முத்தியைப் பண்ணுமென்க. அதன்பின், அம்மாயையினின்றுங் கலாதத்துவந்தோன்றி ஆணவத்தை ஏகதேசத்தில் நீக்கி ஆன்மாவின் தொழில் செய்யுங் கிரியாசத்தியை விளக்கி, முதல்வன் ஆணையால், வினைக்கீடாக வரும்போகத்திற்செலுத்திநிற்கும் சங்கை சித்துரூபனுயுள்ள ஆன்மாவை கலாதத்துவம் பிரகாசிப்பிவிக்கவேண்டுமோவெனில் ஆன்மாக்களுடைய ஞானக்கிரியைகளை அநாதியே ஆணவமலம் மறைக்கப்பட்டிருக்கின்றபடியால் அந்த ஆணவமலத்தைக் கலையினுலே சிறிது நீக்கவேண்டியிருக்கிறது. நீக்காதிருக்கில் விடயத்தை க்கிரகிக்குந்தன்மையினறி கேவலாவஸ்த்தையேயாய் ஆன்மாவென்பது ஒன்று இல்லையென்பது போன்று சூனியாகாரமாய்விடும். ஆனல் அதனல் ஆணவமுழுவதும் நீக்கப்படாதோவென்னில், படாது; ஆன்மாக்களுடைய கன்மாநு குணமாக கேவலத்திலிருக்கிற ஆன்மாவைப் பாசி மூடின குளத்தில் கல்லினைவிட்டெறிய அதுவிழுந்தவிடம் பாசிநீங்குமாறுபோல் இந்தக்கலையினுலே ஆணவத்தை ஏகதேசத்தில் நீக்கு ஈசுவரன், கலையைப் பிரகாசிக்கச்செய்வர். ஈசுவரன் கலையை அதிட்டித்துக்கொண்டு, ஆணவத்தைச் சிறிது நீக்கவேண்டுமோ, தம்முடைய சத்தியினுலே நீக்கலாகாதோவென்னில், ஈசுவர சத்தி பரிசத்தால் அஞ்ஞானம் முழுவதும் நீங்கவேண்டும், மலபரிபாகமின்றி அஞ்ஞான கேவலனுயிருக்கையினு

லே பராசத்திக்கு பரிசயோக்கியமல்லாததுகொண்டு குருவானவர் சித்திரைபண்ணுகிற சீடனைத் தாம் பரிசியாமல் தண்டினுலே தட்டியெழுப்புமாறுபோல, ஈசுவரன், பரிக்கிரசத்தியாகிய கலாதத்துவத்தினுலே, சிறிது? அஞ்ஞானத்தை நீக்குவனென்க. பின்பு அக்கலையினின்றும் வித்தியாதத்துவந்தோன்றி ஆன்மாவினது ஞானசத்தியை ஏகதேசத்தில் விளக்கிமுதல்வன் ஆணையால் அப்போகத்தின்கட்செலுத்திநிற்கும் விடயதரிசனத்துக்கு ஆன்மஞானமேயமையாதோவெனின் ஆன்மஞானமானது சுத்தசைதந்நியமாகையால் சிவாபிமுகமாவது ஒழிந்து விஷயாபிமுகமாகாது. அபிமுகம்-எதிர் நோக்கினது. விடயதரிசனத்தில், புத்தி, கரணமாகாதோவெனின் புத்தியும், ஆன்மாவினுல் கிரகிக்கப்படுகையினுலே அதுவும் சடமே; புத்தி ஆன்மாவுக்கு விடயமாகையால் சக்ஷுகரணமாக உருவங்களைக் கிரகிக்குமாறுபோல இந்தப்புத்தியையுங்கிரகிக்கிறதுக்கு வித்தை, கருவியென்க. விடயதரிசனத்தில் சக்ஷுமுதலிய இந்திரியங்களைப்போலன்றி புத்தியாதிகரணத்திரயங்களும் மனம், சமுசயத்தையும் அகங்காரம், அபிமானத்தையும், புத்தி, நிச்சயத்தையும் பண்ணுகையால் பதார்த்த தரிசனத்தில் சூரியப்பிரகாசம்போல விடயதரிசனத்தில் இவைகள் வித்தைக்குத்துணைக்காரணமாயிருக்கும். ஆகையால், கலையானது, ஆணவத்தைச்சிறிது நீக்கி ஞானக்கிரியைகளைப் பிரகாசிப்பிக்க இந்தவித்தை ஞானத்தைக்கலுஷிதம்பண்ணிவிடய தரிசனத்தைப்பண்ணிவிக்கும். கலுஷிதம்—கலக்கப்பட்டது. இனி அவ்வித்தையினின்று அராகதத்துவம் தோன்றி ஆன்மாவினது இச்சாசத்தியை விளக்கி முதல்வன் ஆணையால் வினைக்கீடாக வரும், அப்போகத்திற் செலுத்திநிற்கும். சங்கை அராகதத்துவமென்று ஒன்று தோன்றி, விடய இச்சையைப்பண்ணவேண்டுமோ? ஆன்மா இச்சாஞானக்கிரியாவான் ஆகையால் அந்த இச்சை தானேபோதுமென்னில் சாக்கிரத்தில் அந்த இச்சாஞானக்கிரியைகள் இருக்கையிலும் விருப்பமில்லாதவனுன புருடனுக்கு போகமில்லாமலிருக்கையாலும் சக்தனுன புருடனுக்கு அசுத்தமாயிருக்கிற போகங்களைப் புசிக்கையில் அமைவுபெறுமலிருக்கையினுலும் இந்த அராகதத்துவமுண்டாகி, போக்தாவுக்கு உபகாரத்தைப்பண்ணுமென்க. இவ்வாறு கலைமுதலிய மூன்றும் தொழில் முதலிய மூன்றனையும் விளக்கிய வழி ஆன்மா கன்மத்தை வரையறுத்தலும் நியமித்தலும் செய்யுமுகத்தான் உபகரிப்பன வாயகாலநியதிகளும் உள்படப் பஞ்சகஞ்சுகமுடையவுயிர், அவ்விச்சை முதலிய மூன்றனையும் ஏகதேசத்தின் மருவி, பொதுவகையான் நிச்சயமாகிய புருடதத்துவமெனப் பெயர்பெற்று, முதல்வன் ஆணையால், அப்போகத்தில் உன்முகமாய் நிற்குமென்க. சிறப்பு வகையான புருடனென நிற்றல், எண்ணெயும் திரியும் அக்கினியும் கூடினவிடத்துத் தீபம் போலக் கலாதியும் பிரகிருதியிற்றோன்றிய அவிச்சை முதலிய பஞ்சக்கிலே

சமுமுடைத்தாய வழியே யென்க. பஞ்சக்கிலேசமாவன, அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என்பனவாம். இங்கே பொதுமை யென்றது சாதாரணத்தை; சாதாரணமாவது விஞ்ஞான் கலர்க்கும் பிரளயாகலர்க்குமில்லாத புத்தியாதி காலாக்கினி ருத்திர புவன பரியந்தம் உண்டான போகங்களைப் புசிக்கச்சமர்த்தனாய் நிற்பது. இனிச்சங்கை. ஆனல் கலாதியே புருடதத்துவத்துக்குக் காரணமாய்விடும், பிரகிருதியிற் றேன்றிய அவித்தியா சம்பந்தம் வேண்டாவென்னில் பிரகிருதி அவிச்சை சம்பந்தமில்லாதபொழுது பிரளயாகலனாகி மிச்சிராத்துவ விர்த்தியேயாய் பிராகிருத போகத்தைப் புசிக்கமாட்டான். ஆகையால் பிரகிருதி அவித்தியா சம்பந்தமும் வேண்டுமென்க. ஆன்மாவுக்கே புருடனென்னு நாமமன்றி புருடதத்துவமென்று வேறேயொன்று இல்லையென்னில், அப்பொழுது தத்துவ முப்பத்தாறு என்கிற எண்ணிக்கையுங் கூடாது; வித்தியாகலா சோதனையில் புருடதத்துவ சோதனையுமில்லையாம்; கஞ்சுகஸ்தானமாக இந்த புருடதத்துவமென்று ஒன்று ஆன்மாவை ஆவரித்துக்கொண்டு சஞ்சரியாதபொழுது விபுவாயிருக்கின்ற ஆன்மாவுக்குப் போக்குவரத்துக் கூடாது. ஆகையால் புருடதத்துவம் அவசியம் உள்ளது என்பது அங்கீகாரம். இது புவனதாரமாகாமல் ஆன்மாவையே ஆவரித்துக்கொண்டு இருக்க இதில் இருக்குமென்ற புவனங்களும் இலக்கணையாகப் பிரகிருதி மத்தகத்தில் இ[illegible]க்குமென்கையால் புருடதத்துவமென்றென்றில்லை; ஆன்மாவுக்கே ஓர் ச[illegible]யத்திலுண்டான நாமமெனறு கூறுவார்கள். முன்சொன்ன யுத்தியினல் அது கூடாதென்க; கலைமுதலிய பஞ்சகஞ்சுகத்தோடு பிரகிருதியிலுள்ள அவித்தையுங்கூடிய ஷட்கஞ்சுகமாமென்னில், கூறினது ஒக்கும்; அவித்தை, தாத்துவிகமாய்க் குணமன்றி தத்துவமல்லவாகலால், பஞ்சகஞ்சுகமே யிந்த பும்ஸ்துவமலமென்க. காலாக்கினி ருத்திரபுவனபரியந்தம் வியாபித்திருக்கையால் தீக்ஷையினலே காலாக்கினி ருத்திரபுவன சோதனையிலே போகவேண்டுமென்னில், அப்படியல்ல; இந்த பும்ஸ்துவத்தைப் பிரகிருதிக்குமேல் எண்ணப்படுகையால், காலாக்கினிருத்திர புவனமாதியாகப் பிரகிருதி பரியந்தம் புவன சோதனைகளில் ஸ்தூலரூபம் நிவிர்த்தியாகி ஸ்ரீகண்ட பரமேசுவர புவனமாதியாகிய கலாதத்துவ சோதனையிலே முழுவது நீங்கும், அப்பொழுது ஆன்மாவுக்குப் புருடனென்கிற நாமமில்லையாகுமென்க. அதன்பின் கலையினின்றும் மூலப்பகுதி முதல்வன் ஆணையாற்றேன்றி விபரீதவுணர்வுடையதாகிய அவிச்சை முதலியவற்றைத் தோற்றுவிக்கும் பின்பு அம்மூலப்பகுதியினின்றும் குணதத்துவம் ஆணையாற்றேன்றி சாத்துவிக முதலிய மூவகையாய், அவற்றுள் ஒவ்வொன்று மூத்திறப்பட்டு ஒன்பது வகையாகும். அவையாவன சாத்துவிகம் பிரகாசமும், சுகமும், தைரியமும் ஆகிய மூன்றுகுணத்தை உடைத்தாயிருக்கும். இராசதம், பிரவிருத்

தி-துக்கம்-சௌரியம்-ஆகிய மூன்றுகுணத்தை உடைத்தாயிருக்கும். தாமசம், அன்னியம்-மோகம்-ஆலசியம் ஆகிய மூன்றுகுணத்தைஉடைத்தாயிருக்கும் என்க. ஒருகுணம் இரண்டுகுணத்தையும் அடக்கித் தான் மேலிட்டு நின்றபொழுது அதில் இரண்டு குணந்தோன்றி பிரதானகுணத்தோடு மூன்றுகுணமாகும். இப்படியே மூன்றுகுணமும் ஒன்பது குணமாகும் எனக் கூறுவாருமுளர்.

(இன்னும் வரும்)

சுப்பிரமணியபிள்ளை,
மதுரை திருஞானசம்பந்தசுவாமிகள் மடம்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

பண்டைச் சாசனப்பயன்-க.

மைந்தர் யாவரும் நல்லுருக்காமரென நினைத்துக் கன்னமார்கள் கைச்சிலைகளாக வயல்களெங்கும் பொதுள வவ்வாறே யெண்ணிப் பகழிகளாக நீலம் பங்கயம் பலவுமலருந் திருத்தஞ்சை இராஜராஜேஶ்வரத்து (இவ்வாலயஞ்சகம் கூஉசு தொடங்கியரசாண்டவிராஜராஜதேவர் கட்டியது) மேலாவரண முதன்மாடத்தின்கண் வரைந்துள விச்சாதனம் உடையார் ஸ்ரீராஜராஜேஶ்வரமுடையாருக்குத் திருக்காரியஞ் செய்த பொய்கைநாடுகிழவன் ஆதித்தன் சூரியனை தென்னவன் மூவேந்தவேளான், திருமகள்போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கேயுரிமை பூண்டமை மனங்கொளக் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வெங்கைநாடுங் கங்கபாடியுந் தடியபாடியும் நுளம்பாடியுங் குடமலைநாடுங் கொல்லமுங் கலிங்கமு மெண்டிசை புகழ்தர வீழமண்டலமு மரட்டபாடி யேழரையிலக்கமுந் திண்டிறை வென்றி தண்டாற்கொண்ட தன்னெழில்வளருழியு ளெல்லாயாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்தேசுகொள் இராஜகேசரி வன்மரான ஸ்ரீராஜராஜதேவர்க்குயாண்டு இருபத்தொன்பதாவது வரை (சகம்-கூருரு) எழுந்தருளுவித்த நம்பியாரூரணர் (உ,உங,

ருரு,ருசு) நங்கைவரவையார் (ரு,உரு,ருஎ,சுசு.) திருநாவுக்கரையர் (அ,உ..,ருந.) திருஞானசம்பந்த அடிகள் (கக. நசு. ருக.) தாந்திருக்கோயிலமைத்துப் பிரதிட்டைசெய்த சிவபெருமானைக் காதலோடுங் கைகூப்பித் தொழுதுகொண்டிருக்கும் பெரியபெருமாளாகிய ராஜராஜதேவர் (கச. சச.) அவர் பத்தினியார் உலோகமாதேவியார் (யஎ. சஎ.) சந்திரசேகரரென்னும் பிரதிமங்களேழினையு மவ்வேளானும் (உந, ருO) இராஜேந்திர சிங்கவளநாட்டுத் திருவாலிநாட்டுடையார் ஸ்ரீராஜராஜேஶ்வரமுடையார் தேவதானங் குறுவாணியக்குடியாகிய.பரகேசரிபுரத்து நகரத்தாரும் (ருக) நித்த விநோதவளநாட்டு வெண்ணிக்கூற்றத்துடையார் ஸ்ரீராஜராஜேஸ்வரமுடையார் தேவதானம் வெண்ணி நகரத்தாரும் (ருசு) கொடுத்த பொன்னாபரணங்களையும் பற்றியது.

இது திருநெறித்தமிழ் தேவாரந் திருப்பாடலென்னு மூவேதங்களையு மருளிச்செய்த ஆளுடையபிள்ளையார் ஆளுடையவரசுகளாளுடைய நம்பிகளாகிய மூவர் தம்மையு மவ்வன்றொண்டப் பிரானார் காதலியார் நங்கை பரவையாரையுங் கூறுதலினன்னோர் கிறிஸ்தாப்தம் பதின்மூன்றுநூற்றாண்டந்தத்து விளங்கினரென் றுரைக்குங் கால்டுவேல் பண்டிதர் (Comparative Grammar, 2nd Edition pp 138 ff of the Introduction) முதலாயினோர் தம்மதக்கொள்கைக்கேற்ப மனம்போயவாறே கருதிச் சொல்லுங் காலவரையை மறுத்துத் தமிழ்மொழியின் வரலாற்றுச் சரித்திரத்தைப் புலப்படுத்தற்குரியதூஉ மின்றியமையாததூஉ மாதலினீண்டெடுத்து வரைகின்றாம்:—

சிலாசாசனம் முதற்பகுதி.

ஸ[ஸ்தி]ஸ்ரீ॰ [] உடையார் ஸ்ரீர[ா]ஜராஜீஶ்வரமு உ
வ த
டையார்க்கு ஸ்ரீகார்ய[ம்]ஞ் செய்கின்றபொய்கை—
நாடுகிழவன் ஆதித்தன் ஸூர்ய[ன்]னை தென்னவ—
ன் மூவெந்தவெளான் ஸ்ரீராஜராஜீஶ்வரமு உ—
(டையார் கொயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது
வரை எழுந்தருளுவித்த செப்பு ஸூதிமங்கள்

[உ]டையார் கோயிலில் முழத்தால் அளந்தும் ஈ தங்கள்சரடு நீ-
ந
க்கி உலஷ்ணமேரு விடங்கன் என்னுங்கல்லால் நிறை எடு—
த்தும் பொன் ஆடவல்லான் என்னுங்கல்லால் நிறை எடுத்—
துங் கலிலல் வெட்டினபடி || [க] வாதாதிகெஸாஷூ பதி
னெழுவி—
ரலில இரண்டு தொரை உசரமும் இரண்டு திருக்கைய்யும் உ
டையராகக்கன—
மாக எழுந்தருளுவித்த நம்பி ஆரூரனர் வூதிமம் ஒன்று |
[உ] [இ]வர் நின்ற இருவி-
ரலை உசரத்து வதூழ ஒன்று ||— [ந] இதனொடுங்கூடச்
செய்த எண்விரல் ச—
மசதுரத்து மூவிரலெ இரண்டுதொரை உசரத்து இவர் எழுந்
தருளிநின்ற
வீமழ ஒன்று [||-] [ச] பதினறுவிரல் நிளத்து இரண்டு திருக்
கையுடையராகக்கன—
மாக எழுந்தருளு[வி]த்த நங்கை பரவையார் வ.திமம் ஒன்
று ||-[ரு இவர் எழுந்த
ருளிநின்வ இ[ரு]வி[ரலெ] இரண்டு தொரை உசரத்து வதூழ
ஒன்று (சா)
[இ]தனொ
கூடச்[செ]ய்த அறுவிரலெ இரண்டு தொரை சமசதுரத்து
[மூ]விரல் உச—
ரத்து வீம[ழ ஒ]ன்று ||—[எ] வாஷாதிகெஸாஷூ இருபத்
து இருவிரலெ இரண்டு தொ
ரை உசரத்து இரண்டு திருக்கைய்யுடையராகக்கனபாக எழு
ந்தருளுவித்த திரு—
நாவுக்கரையர் வூதிமம் ஒன்று ||—[அ] இவர் எழுந்தருளி
நின்ற இரு—

விரலெ ஆறு

தொரை உசரத்து வதழ் ஒன்று ||—(கூ) இதனொடுங்கூடச் செய்த எண்விரலெ

ஆறு தொரை[ச்] சமசதுரத்து நால்விரல் உசரத்து வீரழ ஒன்று ||—[ய]

வாஷாழிகெ

ஸாஙழ இருபத்திருவிரலெ இரண்டுதொரை உசரத்து இரண்டு திருக்கையுடை—

யராகக்கனமாக எழுந்தருளுவித்த திருஞானசம்பந்தடிகள் வூதிமம் ஒன்று [யக]

இவர் எழுந்[தரு]ளிகின்ற இருவிரலெ இரண்டுதொரை உசரத்து வதழ—

ஒன்று [யஉ]

[இதனொ]டுங்கூடச் செய்த ஒன்ப[தி]ற்று—
விரலெ இரண்டு தொரைச் சமசதுரத்—
து நால்விரல் உசரத்து [வீப]ழ [ஒன்று [யங]
வாஷாழிகெஸாஙழ ஒரு முழமெ நா[ல்] விர—
லரை உசரத்து இரண்டு திருக்கையுடை[ய]ரா

[தொடரும்]

ப. அ. முத்துத்தாண்டவராயன்.

ஆகாரம்.

"வருகிற கேடெல்லாம் வாயினாலேயே" என்று கூறியது ஒரு விதத்திற்காகவன்று. வீண்வம்பு, கடுஞ்சொல், பொய் இவைகளே எல்லாத்தீங்கிற்கும் மூலமென்பது ஒரு புறமிருக்கட்டும். பெரும் பான்மையாய் வருகிற வியாதிகளுக்கெல்லாம் காரணம் யாதென நினைக்கிறீர்கள்? அவரவர் உட்கொள்ளும் உணவைப்பற்றி யன்றோ அவை அத்தனையும் வருகின்றன. ஆகவே வியாதிகள் வருவதற்கெல்லாம் முக்கியமான வழி வாயும் வயிறுமே. நமது ஆகாரம் நமது தேகத்தின் சுகாதாரத்துக்குத்தகுந்தபடி யிருக்கவேண்டும். உணவுப்பொருள்களெல்லாம் ஒரு தன்மையவல்ல. ஒரு பொருளிலேயே பலதிரவியங்களுண்டு. ஒவ்வொன்றுக்கும் குணங்கள் வேறு. இதைப்பின்னிட்டு விவரிப்போம். நிதானித்துப் பார்ப்போமாயின் ஒருவனுடையகுணமும் செய்கையுங்கூட அவனுடைய ஆகாரத்தைப் பொறுத்திருக்குமென்று ஏற்படும். தனது தேகத்துக்கேற்ற ஆகாரத்தைச் சரியானவிதமாய்க்காலாகாலத்தில் கிரமமாயுண்டு, ஜீரணசக்தி குறைவில்லாமலிருக்கப்பெற்று நல்ல சௌக்கியத்திலிருக்கு மொருவன் மிக்க உல்லாசமும் ஊக்கமும் சுறுசுறுப்பும் உள்ளவனாயிருப்பான். கண்டதைத்தின்று அஜீர்ணம் முதலான வியாதிகளால் பீடிக்கப்படுபவனிடத்தில் சிடுமூஞ்சித்தனத்தையும் மனவுறக்கத்தையும் பெரும்பாலும் காணலாம். பெற்றோர்களின் மதிக்குறைவினாலேனும், பொருட்குறைவினாலேனும் தகுந்த ஆகாரம் ஊட்டிவளர்க்கப்பெறாத குழந்தைகள் பின்னிட்டு தேகதத்துவத்திலும் மனோசக்தியினும் குறைந்தவர்களாய் அதுகாரணமாக ஊக்கம் உறுதி முதலிய குணங்களுங் குன்றிப்போய், சோர்வும் சோம்பலும் மிகுந்து, வேலைக்குக்கூசி நகைமுகமில்லாமல் கடுகடுத்தவண்ணமாயிருப்பார்கள். புத்தியும் ஆயுளும் ஆகாரத்திற்குத் தக்கபடிதானிருக்கும்.

ஆகாரம் இல்லாமற்போனால் உயிர்கள் பிழைத்திருப்பது முடியாதென்று ஒருவர் சொல்லவேண்டியதில்லை. நமது தேகத்தில் அனேகவிதமான அழிவுகள் எப்பொழுதும் உண்டாகின்றன.

வேலைசெய்யும் போதெல்லாம் தேகத்தின் ஸத்துவம் குறைகிறது. கை கால் முதலியவுறுப்புக்களை அசைப்பதும் சரீரத்தின் தசை நரம்பு முதலியவற்றிற்கு வேலைதான். நாம் யோசிப்பதும் நினைப்பதுங் கூட மூளைக்கு வேலையாகும். நாம் தூங்கும்பொழுது சுவாசம் விடுகிறதும், மார்பு அடித்துக்கொள்கிறதும், இரைப்பையில் ஆகாரம் ஜீர்ணமாகிறதும் இவை முதலானவையெல்லாம் அவ்வவ்வுறுப்புக்கு வேலையே. இவ்வேலைகளெல்லாம் தேகத்தில் பலவிதமாய் நஷ்டமுண்டாகிறது. நிமிஷந்தோறும் இவ்வாறுண்டாகும் நஷ்டங்களை அப்போதைக்கப்போது பூர்த்தி செய்துகொண்டு வரவேண்டுவது அவசியமல்லவா? அப்படிச் செய்யாவிடின் சரீரம் வரவர க்ஷீணித்துப்போய்க் கடைசியில் நாசத்தையடையும். இதற்காகத்தான் நாம் அடிக்கடி ஆகாரமும் பானமும் உட்கொள்ளுகிறோம். தேகத்தில் குறைவுண்டாகும்போது அதைப் பூர்த்தி செய்யவேண்டுமென்பதைப் பசியும் தாகமும் நமக்குத் தெரிவிக்கின்றன. நாம் கொள்ளும் ஆகாரம் முதலியன நமது தேகத்திலுண்டாகும் நஷ்டங்களெல்லாம் சரிக்கட்டிப் போவதற்குப் போதுமான அளவு இருக்கவேண்டியது. வளருகிற குழந்தைகளுக்கு நஷ்டத்தைப் பூர்த்தி செய்வதுமட்டும் போதாது. அவர்கள் தேகம் விருத்தியடைய வேண்டியதாகையால் நஷ்டத்திற்கு அதிகமாகவே ஆகாரஞ் செல்லல் வேண்டும். நாம் கொள்ளும் உயிரற்ற பொருள்களாகிய உணவு வயிற்றிற்சென்று ஜீரணமாகி இரத்தத்தோடு கலந்து எலும்பு, தசை மயிர், தோல் முதலான பல வேறுவகை உறுப்புக்களாக எவ்வாறு உயிரோடு சம்பந்தப்பட்டு மாறிப்போகிறதோ அறியோம். சிருஷ்டி தத்துவத்தை நோக்க நோக்க ஆச்சரியம் மேலிடுகிறது.

உணவுப் பொருள்களெல்லாம் நான்கு வகுப்பிலடங்கும். எவ்வாறெனில்:—முதலாவது, தேகத்தின் தசை எலும்பு முதலியவற்றை வளர்த்துத் தேகத்திற்கு ஊட்டம் தரும் சத்து. இது ஜீவவர்க்கத்திற்கு மிகவும் முக்கியமானது. வேண்டிய அளவுக்குக் குறைந்தால் சௌக்கியம் உடனே தப்பிப்போம்; தேகம் இளைக்கும்; பலமென்பதிராது; ஞாபக சக்தி குன்றும். இந்த ஸத்து வேண்டிய அளவுக்கு மேற்படுமாயின் தேகத்தில் உதிரம் அதிகரித்து மாமிச பாகமும் விசேஷமாய் வளர்ந்து தேகம் ஸ்தூலிக்கும். அன்றியும்

இந்த ஸத்து மிதமிஞ்சி யிருக்குமவர்களுக்கு அதிகமான கோபமும் குரூர சுபாவமும் இயல்பாயிருக்கும்.

இரண்டாவது; நெய்ப்பசை: இதுவும் ஜீவவர்க்கத்திற்கு அவசியமாய் வேண்டியது. வெண்ணெய், நெய் முதலியவைகளும், தேங்காய், எள், வேர்க்கடலை முதலியவற்றின் நெய்களும் இதைச்சேர்ந்தவை. இந்த நெய்ப்பசை கொழுப்பு ரூபமாக சரீரத்தின் தோலிற்கு அடியிற் படர்ந்திருக்கும். இது தேகத்திலுள்ள ஜீவாக்கினி அணைந்துபோகாதபடி எரிந்துகொண்டிருப்பதற்கு விறகு போலுதவுகின்றது. சரீரவுறுப்புக்களின் பலவிதமான வியாபாரங்களுக்கு இவ்வக்கினிதான் காரணம். பிராணன் போகிறகாலத்தில் இந்த ஜீவாக்கினி அணைந்துபோகும். இறந்தபிறகு தேகம் சில்லிட்டுப் போவதை யாவரும் பார்த்திருக்கலாம். கொழுப்பு தேகத்தில் அதிகமாகச்சேர்ந்தால் தேகம் ஸ்தூலிக்கும்.

மூன்றாவது; கஞ்சிப்பசை, சர்க்கரை முதலியன. இவைசரீரத்திற்கு இன்றியமையாதவை யன்றெனினும் பலவிதமான உணவுப் பொருள்களிலெல்லாம் இவை சேர்ந்திருக்கின்றன. கிழங்கு வகை, அரிசி, கோதுமை, ஜவ்வரிசி முதலானவற்றிற் கஞ்சிப்பசை விசேஷமாயுண்டு. இக்கஞ்சிப்பசை, சர்க்கரை முதலானவை குணத்தில் நெய்ப்பசைக்குச் சமானமாயிருக்கின்றன.

நான்காவது; தாதுவர்க்கங்கள். இவற்றில் ஜீவவர்க்கத்திற்கு முக்கியமாய் வேண்டியது முதலில் நீர், இரண்டாவது உப்பு. நீரில்லாவிட்டால் பிராணன் நிற்பது அரிது. சௌக்கியத்திற்காக உப்பும் அவசியந்தான். மேற்கூறிய நான்குவகைகளும் குழந்தைகளுக்கு உணவாகக் கடவுள் ஏற்படுத்தியிருக்கும் பாலிற்காணலாம். பாலைத்தோய்த்தால் தயிராக மாறுகிறதன்றோ. அப்படி யிருக்கிற பொருள், முதலாவது வகுப்பைச் சேர்ந்தது. அதில் இனிப்புத் தரும் வஸ்து மூன்றாவது வகுப்பிலடங்கும். அது திரவமாயிருப்பதற்கு ஜலம் காரணமாதலால் அந்த ஜலமும், இன்னும் அதிலுள்ள பல தாதுவர்க்கங்களும் நான்காம் வகுப்பினவை. தேகத்திற்கு வேண்டிய முறைப்படி இவைகளெல்லாம் பாலில் அமைந்திருப்பதி

னுல் பால் ஒன்றுபட்டுமே குழந்தைகளுக்கு முதலில் போதுமான ஆகாரமாகிறது. பால் தேகதத்துவத்திற் கேற்ற வுணவாயிருக்கிறது; ஆதலால் பெரியவர்களுக்குக்கூட அது நல்ல உணவாகும். இனி, நமது நாட்டில் முக்கியமாயுள்ள உணவுப்பொருள்களைக் குறித்து அடுத்தமுறை விவரிப்போம்.

(இன்னும் வரும்).

டி. சி. சாம்பமூர்த்தி ஐயர்.

ஜூட். (JUTE)

ஜூட் என்பது சணப்பநார் போன்ற ஓர்விதநார் கொடுக்கும்படியான செடி. இந்நாரைக்கொண்டுதான் கோணிப்பை முதலானவைகள் செய்வது. இப்பயிரானது வங்காலத்தில் தான் ஏராளமாய்ப் பயிரிடப்பட்டு வரு[illegible]றது. அங்கே சுமார் 30-லட்சம் ஏக்கரா நிலம் இதனுல் சாகுபடியாகி[illegible]தெனக் கணக்கிடப் பட்டிருக்கிறது. இன்னும் அஸாம் நேப்பாளம், ப[illegible]மா, வடமேற்குப்பிரதேசங்களிலும் சிற்சில பாகங்களில் இப்பயிர் சாகுபடியாகிறது. இப்பயிருக்கு அனுகூலமாக பூமி, பயிர்கள் சற்று வளர்ந்து வரும்போது பிரவாகம் வந்து அதில் அமிழ்ந்திருக்கக்கூடிய தாயிருக்க வேண்டுமாம். அதாவது அதற்கு வண்டல்பூமியே சிரேஷ்டம் போலும். களிமண் பூமியில் உயர்ந்த நயமான நார் உண்டாகிறதென்றும் மற்றச் சத்தில்லாத பூமிகளில் முரட்டு நாருண்டாகிறதென்றும் சொல்லப்படுகிறது. ஜலசமர்த்தியும், சதா ஈரம்காத்திருக்கும்படியானதுமான பூமியாயின் இப்பயிர் நன்ருய்வளரும். நெற்பயிருக்கிதமான பூமி இதற்கும் அனுகூலமாயிருக்கும். பூமி எவ்வித வளமுள்ளவாயினும் நீர்ப்பாசனம் குறைவில்லாதிருக்குமாகில் இப்பயிர் எவ்விடங்களிலும் வளரும். பெரிய நதிகள் கடலில் சங்கமமாகிற பாகங்களிலும் முகத்துவாரம் கழிமுகம் முதலிய பாகங்களிலும் விசேஷமாய் வளரும். விதை விதைப்பது வடபாகங்களில் ஏப்பிரல் மாதத்தில் நடக்கிறது. அதற்கு முன் நிலத்தைப்பண்படுத்துவதற்கு, மழை பெய்தபின் நிலத்தை மூன்று நான்கு தடவை யுழுது அதன்மேல் அதை நன்ருய்ச் சமப்படுத்திச் சிறிது ஈரமாயிருக்கும்போதே விதையை விதைத்து விதைகள் மண்ணோடு கலக்கும்படி யாகச்செய்து வேண்டிய எருவும் போடவேண்டியது. ஒருஏக்ராவுக்கு 8முதல் 12-பவுன்வரையில்

விதை விதைக்கலாம். செடிகள் 4 அங்குல உயரமானபின், களை யெடுக்கும் கருவியைக்கொண்டு அவை 4, 5-அங்குல தூரமிருக்கும்படியாகச் செய்ய வேண்டியது. அதன்மேல் அடிக்கடி கையாலேயும் களை பிடுங்கவேண்டியது. இப்படிச்செய்வதால் பயிர்கள் சீக்கிரம் 10, 12-அடி உயரம் வளருகின்றன. அடர்ந்து மெலிந்திருக்கும் பயிர்களை விட விசாலித்துத் தடித்து வளரும் பயிர்களே மேன்மையான நார் கொடுக்கின்றன. விதைகளும் நல்ல விதைகளாகின்றன. மேலும் நாரெடுக்கும் உழைப்பும் மட்டாகின்றது. செடிகள் முற்றிலும் பழுத்துப்போவதன் முன்னமே அவைகளையறுத்து விடல்வேண்டும். சிலசமயங்களில் காயுண்டாவதற்கு முன்னும் அறுப்பது நலம். செடிகளை நிலமட்டத்திற்கு அறுத்துக் கட்டுக்களாகக்கட்டிச் சில நாள் வயலிலேயே நிற்கவைத்துப்பின் அடுத்துள்ள ஜலாதாரத்தில் 21 நாள் வரையில் அவை முற்றிலும் அழுகிப்போகும் வரையில் ஊறவைக்கவேண்டும். சிலசமயங்களில் ஒரே இடத்தில் இவைகளை ஊறவைப்பதால் ஜலம் கெட்டு நாரின் குணமும் கெட்டுப்போகிறது. அடிக்கடி நிலத்தை மாற்றுவதே நலம். அதன்பின் பட்டைகளை லேசாய் உரித்துத்தண்ணீரில் கழுவிப் பின் அடிக்க நார்வேறாய் வரும். நாரின் மேன்மை அதன் நிறம், பளபளப்பு, உறுதி, நீளம், நுண்மை, வேரில்லாமை இவைகளைப்பொறுத்தது. இவைகளில் குறைவிருந்தால் விலையில் மணங்கொன்றுக்கு இரண்டு ரூபாவுக்கு மேல் வித்தியாசமுண்டாகும். நார்கள் சேகரமான பின் நீராவி யந்திரத்தில்வைத்து அழுத்தி 400-பவுன் நிறையுள்ள கட்டுக்களாகக்கட்டி எற்றுமதி செய்யப்படும். ஓர் எக்ரா நிலத்தில் இவ்வித மூன்று மூட்டை நார் எடுக்கலாமாம். ஆனால் சரியானபடி பயிர் செய்து வந்தால் ஓர் எக்ராவுக்குச் சுத்த நார் 2400-முதல் 2600-பவுன் வரையில் எடுக்கலாம். இப்பயிரானது பங்காளத்தில் நன்றாய்ப்பயிராகி வருகின்றபடியால் தென்னிந்தியாவிலும் அதைப்பயிரிட்டு விருத்தியாக்க வேண்டுமென்கிற எண்ணத்துடன் இதற்கு கோதாவரி முகத்துவாரத்தினருகிலுள்ள நிலங்கள் தகுந்ததாவெனப்பரிசோதிக்கும்படியாகச் சென்னை ரெவனியூபோர்டாரவர்கள் தீர்மானித்து ஆரம்பத்தில் சாமல் கோட்டை கவர்மெண்ட் சோதனை பண்ணையில் இப்பயிர் சாகுபடி செய்து பார்க்க கவரன்மெண்டாரனுமதியின்மேல் உத்தரவளிக்கின்றனர்.—தக்ஷிணதீபம்.

ஜகத்ஜோதி.

(முன் தொடர்ச்சி.)

ஜாதி சிறையிலிருந்த காலத்தில் பொழுது போக்கின கூறினேம். அவ்வாறு விநோதமாய்ப் பொழுது போக்கி றைச்சாலையின் வாழ்வு ஒரு வாழ்வாகுமா? அவ[ள்] மனம் லேசப்பட்டது. தனக்குமீட்[சி] உண்டோஎன்று பலசமயங் ள் ஏக்கங் கொண்டாள். எண்ணாத எண்ணமெல்லாம் ண்ணி அவள் ஏழை நெஞ்சம் புண்பட்டது. இவ்வா யில் அவள் வேலைத்திறமை ஊரெங்கும் பரவத்தொடங் பிரபுக்கள் வீடுகளெல்லாம் அவள் கைவேலை விளங்கிக் ந்தது. அவள் கை பட்ட சாமான்களை எவரும் வியந்து ங்கள் வீடுகளை அலங்கரித்து வந்தனர். ஒரு பிரபு அவள் ரியத்தைக் கேட்டு மோகங்கொண்டான். அதனை அவ வள் தாதி மூலமாகக் குறிப்பித்தான். புனர்விவாகம் பண் ாள்ள வேண்டினன். அவளும் அதற்கிசைந்தவள் போல ங்கு பண்ணினாள். அவள் அந்தரங்க நோக்கம் அப்பிரபுவின் போகத்துக்கு இசையவேண்டுமென்பதில்லை. ஆனால் அவ்வாறான வதந்தி யுலாவப் பெற்றால் ஒருகால் சக்கரவர்த்தி காதிலும் எட்டித் தன் சிறைமீட்சிக்கு ஏது உண்டாகுமென்று நினைத்தாள்.

இவளது பாசாங்கை உண்மையென மதித்து அப்பிரபு மகிழ்ந்தான். தனக்குறுதி வாக்குக் கொடுக்கும் வண்ணம் அவன் பல முறை வே டினன். அவள் காலஹரணம் பண்ணிக் கொண்டே வந்தனள். ரு நாள் அவன் மிகவும் கண்டிப்பாய் உறுதி கொடுக்கும்படி சொல்லியனுப்பினான். வள் அவ்வாக்குக் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. அத்துஷ்டன் மனோபீஷ்டத்தைப் பலாத்காரமாய் நிறைவேற்ற எண்ணங்கொண்டு திருட்டுத்தனமாய் ஜகத்ஜோதியிருந்த அரண்மனையில் நுழைந்தான். அவள் தன்னந் தனியே இருக்கிற சமயம் பார்த்து அவளிருந்த அறைக்குள் நுழைந்து தன்னை அங்கீகரிக்கும்படி வேண்டி நின்றனன். அவள் யாதொரு

மறுமொழியுங் கூறுமலிருந்தனள். இத்துஷ்டனை ஏறிட்டுப் பார்க்கவுமில்லை. பலமுறை அவன் இன்சொல் கூறியும் அவை யெல்லாம் அவளுக்குச் செவிடன் காதில் சங்கூதினது போலாயிற்று. சாம உபாயத்தால் யாதொன்றும் பயன்படவில்லையென்று தான உபாயத்தால் அவள் மனத்தைக் கவரப் பலவாறு முயன்முன். அதிலும் அவன் ஜெபஞ்சாயவில்லை. பின் சிறிது நேரம் யோசித்துத் தண்ட உபாயத்தையே கைக்கொள்வதாகத் தீர்மானித்து அவள் பக்கல் சென்று அவள் கையைப் பிடித்திழுத்தான்.

ஜகத்ஜோதியோ இத்துஷ்டன் துராகிருதத்தைச் சிறிதும் சகியாதவளாய் வெடுக்கென்று கையை உதறிக்கொண்டு அடுத்த அறைக்குள் நுழைந்து ஒரு கையீட்டியை எடுத்துக்கொண்டு "துஷ்டா! இனி நீ இவ்விடம் விட்டு ஓடிப்பிழையாவிடின் இதற்கு இரையாவாய்" என்றனள். சாமமயக்கத்தால் அறிவிழந்த அத்துஷ்டனுக்கு அச்சமயத்தில் ஒன்றுந் தோன்றுது பிரமித்து நின்றனன். சிறிது நேரஞ்சென்று ஜகத்ஜோதியின் கையிலிருந்த ஆயுதத்தைப் பிடுங்க முயன்முன். அவள் மகாதைரியசாலி. மனைவலிமையுள்ளவர்களுக்குத் தேக வலிமை பஞ்சமா. அச்சமயத்தில் அவள் தன் இன்னுயிர்க்காதலனுகிய ஷியர் ஆப்கானை நினைத்துக்கொண்டாள். அந்நினைப்பே அவளுக்கு உபபலம் போல் உதவியது. மறுபடியும் அத்துஷ்டனை உயிர்தப்பிப்போகும் வண்ணம் எச்சரித்தனள். அவனுக்குக் கேடுகாலமிருக்கையில் அவன் எப்படி விலகுவான். உன்மத்தம் பிடித்தவன் போல் நின்முன். உடனே பாய்ந்து அவள் கையிலிருக்குங் கருவியைப் பிடுங்கச்சென்முன்.

அவளுக்கு நாட்டியத்தில் நல்ல பழக்கமிருந்ததையால் தேகம் சொன்னபடி யெல்லாம் கேட்கும். ஆகையால் உடனே ஒருபுறம் ஒதுங்கித் தன் கையீட்டியா[illegible]த்துஷ்டனை ஒரு குத்துக்குத்தினுள். அவனும் பெருங்கூச்[illegible]டுக்கொண்டு அடியற்ற பனைபோல் சாய்ந்தான். ரத்தம் அருவிபோல் கொப்பளித்துக்கொண்டு ஓடிற்று. ரத்தப்பெருக்கால் அவன் சோர்வடைந்து எழுந்திருக்கச் சக்தியற்றுச் சிறிது நேரத்தில் உயிர் துறந்தான். அவன் போட்ட கூச்சலைக் கேட்டுத் தாதிகளும் வேலைக்காரிகளும் ஓடி வந்தார்கள்.

அங்குற்ற வீரச்செய்கையைக் கண்ணுற்ற ஜகத்ஜோதி வாயால் சகலமும் அறிந்து அவள் தைரியத்தைப் பாராட்டினார்கள். உடனே அவ்விஷயம் ஊரெங்கும் பரவிற்று. ஸ்திரீகள் ஆபத்துக்காலத்தில் மனோதைரியங்கொண்டு செய்த சாகஸச்செயல்களுக்குப் பல திருஷ்டாந்தங்களுண்டு. உத்தம குணமுள்ள ஸ்திரீகள் தங்கள் கற்பைக் காப்பாற்றுவதில் உயிரைத் துரும்புபோல் நினைப்பது இயல்பு. "பிராணனை விட்டாவது மானத்தைக் காப்பாற்ற வேண்டும்" என்பதே அவர்கள் கொள்கை. மனத்தை மட்டும் கட்டுப்படுத்திக்காத்துக்கொண்டால் எப்படிப்பட்ட பலமுள்ள சத்துருவும் என்னசெய்யமுடியும். அப்பலமான கோட்டையை எவன் தகர்க்கவல்லவன். கீசகன் துரோபதையைச் செய்த கொடுமையினும் இனிக்கொடுமையுண்டா? அம்மெல்லியலாள் தன் மனவலிமையைக்கொண்டன்றோ அவனைச்சயிக்கவகை தேடினள். இவ்வுலக சரித்திரத்தில் இதுவிஷயமாய் எத்தனையோ திருஷ்டாந்தங்கள் உண்டு. நம் ஜகத்ஜோதியின் புகழ் எங்கும் பரவிற்று. ஊரெல்லாம் அவள் பேச்சையே பேசுவார்கள். அவள் ரூபலாவண்ணியத்துக்கு இசையவே இருந்தது அவள் மனோதைரியமும். அவள் வீரச்செய்கை கடைசியாகச் சக்கரவர்த்தி காதிலும்எட்டிற்று. இதுவரை அவள் விஷயத்தில் உபேக்ஷயாயிருந்தவன் இதுமுதல்கவனிக்கலானான்.

அந்நியன் வசப்பட்டுவாழ்ந்தவளை அவன் அணுக அருவருப்புக்கொண்டதினால் அவளை இதுகாறும் அலக்ஷியம் செய்யத்தொடங்கினான். அவள் வீரச்செய்கையையும் ரூபலாவண்ணியத்தையும் எல்லோரும் புகழ்வதாகக்கேட்டு அவள்பால் மனங்கவிழ்ந்து அவ்வற்புதமாதைப்பார்க்கவேண்டுமென்று நினைத்தான். முன் தான் அய்யாவிடம் பஷங்கேட்டு வருங்காலத்தில் இவன் பார்த்து மையல் கொண்ட ஜகத்ஜோதியே யானாலும்வெகு நாளாய்ப் பாராததாலும் அக்கன்னிப்பருவத்தினும் இதன் கைப்பருவம் மிக்க மேம்பட்டதாகையாலும் அவளைப்பார்க்கப் பேராவல் கொண்டான். அதற்கென்று ஒரு தினம் குறிப்பிட்டுத் தக்க பரிஜனங்கள் புடைசூழப் பல நாளுக்கு முன் பிரிந்த பாவையைப்பார்க்கப் புறப்பட்டான்.

(இன்னும் வரும்)

எஸ். சாமிநாதையர்.

சமாசாரக்கொத்து

தற்கால பீமசேனன் என்று புகழத்தக்க சாண்டோ என்பவர் சென்னையில் பலநாட்கள் தங்கி வேடிக்கைகாட்டிப் பர்மாவுக்குக் கப்பல் ஏறிப்போய்விட்டார்.

* * * *

சிலோனிலிருந்து 1863-ம் ஞு முதல் 1904-ம் ஞு வரை 2255 யானைகள் வெளித்தேசங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இது சராசரி வருஷத்துக்கு 55 யானைகள் ஆகின்றன.

* * * *

மடகாஸ்கருக்கும் இந்திய கடற்கரைக்கும் மத்தியில் ஜனங்களேயில்லாத சுமார் 10,000 தீவுகள் இருக்கின்றனவாம். இவைகள் ஜனவசதியாயிருந்தால் இந்தியாவிலிருந்து ஏழை ஜனங்கள் போய்ப் பிழைக்கலாம்.

* * * *

மைசூர் மகாராஜா அவர்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு பந்தயக்குதிரை 30,000 ரூபாவுக்கு வாங்கியிருக்கிறார். வேல்ஸ் இளவரசர் வருங்கால் நடக்கும் குதிரைப்பந்தயத்துக்காக வாங்கியிருக்கிறார்களாம்.

* * * * *

நம் எட்வேர்ட் சக்கரவர்த்தி அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் 3000 புதுப்பத்திரிகைகளும் 1000 கடிதங்களும் அனுப்பப்படுகின்றனவாம். போப் குருவுக்கோ 22,000 கடிதங்களுக்கு மேல் வருகின்றனவாம்.

* * * *

ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களில் சமஸ்கிருதத்தை விருத்திசெய்வதற்கான சங்கங்கள் 147-ம் இந்தியாவில் 173-ம் இருக்கின்றன. இந்தியாவில் இன்னும் அதிக சங்கங்களிருக்கவேண்டியது. அப்பொழுது தான் அப்பாஷை சரிவரக்காப்பாற்றப்படும்.

* * * *

மரங்களையும் பிரம்புகளையும் காகிதவேலைக்கு உபயோகிக்கு முறையை நன்கு அறிந்த கெட்டிக்காரனொருவனைப் பர்மா கவர்ன்மெண்டார் இங்கிலாந்திலிருந்து கொண்டுவந்திருக்கிறார்கள். இதனால் காகிதம் மலிய இடமுண்டாகலாம்.

*　*　*　*

சலேபியன் தீவில் கொடிய பஞ்சம் உண்டாயிருக்கிறது. ஜனங்கள் ஆகாரமின்றி நாயையடித்துத்தின்கிறார்களாம். சென்ற போவர் யுத்தத்தில் ஆகாரமின்றிச்சனங்கள் குதிரையடித்துத்தின்றதை சகலரும் அறிவார்களே. கலிகாலக்கொடுமைக்கு என் செய்வது.

*　*　*　*

கர்னூல் கலெக்டராகிய மிஸ்டர் ஆர். இராமச்சந்திர ராவு அவர்கள் 2000 ரூ சம்பளத்தில் மைசூர் இராஜ்யத்தின் முதல் கவுன்சிலராக நியமிக்கப் பட்டிருக்கிறாரென்று அறிய ஆனந்திக்கிறோம். அவ்விராஜ்யத்தின் அடுத்த திவான் இவரேபோலும்.

*　*　*　*　*

ஜர்மனி தேசத்தில் பிராண்டன்பெர்க் என்ற இடத்தில் மும்முறை இரட்டைப்பிள்ளைகள் பெற்ற ஒரு ஸ்திரீக்கு ஜர்மனி சக்கரவர்த்தி வெகுமதியாக ஒரு பதக்கம் அளித்திருக்கிறார். இந்த ஸ்திரீயின் தாய் நான்கு முறை இரட்டைப்பிள்ளைகள் பெற்றவளாம்.

*　*　*　*

1904-ம் வரு கடைசி மூன்றுமாதங்களில் சென்னை இராஜதானியில்மட்டும் பாம்புக்கடியாலும் காட்டுமிருகங்களாலும் இறந்தவர்கள் 4223. நாய்க்கடிக்கு வைத்தியசாலை ஏற்படுத்தியவிதம் இப்பாம்புகடிக்குமட்டும் வைத்தியசாலைகள் ஏற்படுத்தினால் நலமாயிருக்குமெனத் தோற்றுகிறது.

*　*　*　*

ஆனால் வந்தவாசியைச் சேர்ந்த கொடியாலம் என்னும் கிராமத்தில் பாம்பு கடித்தவர்களின் விஷம் நீங்கும்பொருட்டு ஒருவர் ஒரு இயந்திரம் ஸ்தாபித்திருக்கின்றனராம். பாம்புகடித்த உடனே அவ்விடம் சென்று அந்த இயந்திரத்தை மூன்றுதரம் பிரதக்ஷணம் செய்தவுடன் விஷம் நீங்கிச் சுகமுண்டாகிறதாக கேள்விப்படுகிறோம். அவ்வாறு நடப்பது உண்மையானால் அவ்வித இயந்திரங்களை அம்மகானைக்கொண்டே ஊர் ஊராய் ஸ்தாபித்தல் நலம்.

சென்ற மார்ச்சுமீ த்தில் ஸிலோனில் மதராஸ் பிரசிடென்ஸி யைச்சேர்ந்த 2,38,000 ரூபா கரன்ஸி நோட்டுக்கள் களவுபோனதாகவும் அவைகளைக்கண்டுபிடிப்பவர்களுக்கு இனம் கொடுக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. முத்துச்சலாபத்துக்குப் போன இலாபம்போலிருக்கிறது.

* * * * *

நேடாலில் ஒரு பெருஞ் சுழல்காற்று :—நாளது சூன்மீ ஆரம்பத்தில் நேடாலில் அடித்த ஒரு பெருஞ் சுழற்காற்றில் ஏராளமான இந்தியர்களும் 50 ஐரோப்பியரும் இறந்துபோய்விட்டார்கள். டர்பானுக்கருகே இக்காற்றால் ஒரு பெரிய ஏரி உடைந்துபோய்விட்டபடியால் 200 சுதேசிகள் மடிந்துபோயினராம். ஐயோபாவம்! எத்தனை ஏழைக்குடித்தனங்கள் தவிக்குமோ?

* * * *

சென்ற வாரத்தில் இந்தியாவில் பிளேக் நோயால் மரணமடைந்தவர்களின் தொகை 4568. பஞ்சாபிலுள்ள பாடியாலா இராச்சியத்தில் மட்டும் 2305; பஞ்சாப்பின் மற்றைப்பாகங்களில் 1358; பம்பாய் மாகாணத்தில் 365, சென்னை மாகாணத்தில் 8; பங்காள மாகாணத்தில் 162; ஐக்கியமாகாணங்களில் 151; பர்மாவில் 93; மைசூரில் 23, ராஜபுதானாவில் 92; காஷ்மீரில் 11.

* * * *

மெழுகுவத்தியை வாயால் ஊதி அணைப்பது மிக்கதீங்கை விளைவிக்குமென்றும் சிற்சில சமயங்களில் பிராண அபாயத்தையும் உண்டாக்குகின்றதென்றும் தெரியவருகிறது. அப்புகை தொண்டைக்குள் அதிகமாய்ச்செல்லுமாயின் மரணமே உண்டாகுமாம். ஆகையால் இது விஷயத்தில் நம் ஜனங்கள் சர்வஜாக்கிரதையாயிருத்தல் நலம். மிகவும் அற்பமாகத்தோன்றுகிற இவ்விஷயம் பெருங்கேட்டை விளைவிக்குமென்றால் இது விஷயத்தில் நாம் கருத்தாயிருக்க வேண்டுமென்று சொல்லவும்வேண்டுமோ?

* * * *

ருஷியர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் ஆகஸ்டு மாதத்தில் சமாதானத்தைப்பற்றிப் பேசச்சந்திக்கும்வரை சண்டை நடந்து கொண்டே இருக்குமெனத் தெரிகின்றது. இரு கக்ஷிக்காரரும் ஐக்கியநாட்டில் ஆகஸ்டுமீ 10உ க்குள் சந்திப்பதாகப் பிரசிடெண்டு ரூஸவெல்டுக்கு வாக்களித்திருக்கிறார்களாம். ருஷியாவில் எங்கு பார்த்தாலும் கலகமும் குழப்பமுமாயிருக்கின்றன. அப்பெருந் தேசம் என்று சீருக்குவந்து சுகமடையுமோ?

*　　*　　*　　*　　*

இராஜப் பிரதிநிதியாகிய கர்ஸான் பிரபுவுக்கும் இராணுவத் தலைவராகிய கிச்சனர் பிரபுவுக்கும் இராணுவ பரிபாலன விஷயமாக உண்டான தர்க்கத்தில் ஹோம் கவர்ன்மெண்டார் இராணுவத் தலைவருக்கு அனுகூலமாகத் தீர்ப்புச்செய்தனர். இதனால் இராஜப்பிரதிநிதி ஆலோசனை சபையில் இராணுவ மெம்பராயிருந்த ஜெனரல் எல்லிஸ் தமது வேலையை இதன்பேரில் இராஜிநாமா செய்துவிட்டாராம். கர்ஸான் பிரபுவும் தம்வேலையை இராஜிநாமாக் கொடுத்துவிடுவதாகச் சொல்லுகிறார்களாம்.

*　　*　　*　　*　　*

சென்னையில் சிலநாட்களுக்குமுன் வந்திருந்த மிஸ்டர் ஸாண்டோவைப்போன்று விசாகபட்டணத்தைச் சேர்ந்த இராமமூர்த்தி என்ற ஒருபலவான் சென்னை பீபில்ஸ் பார்க்கில் தன் பலத்தைக்காட்டும்படியான சில அற்புதவித்தைகளைக் காட்டப் போகின்றானும். எவ்வளவு நிறையாயினும் உள்ள 20 பேர்களடங்கிய ஓர் கட்டை வண்டியைத் தன் மார்பின்மேல் போகச்செய்வதும் 1500 பவுன் நிறையுள்ள ஒரு பெரிய கருங்கல்லைத் தன்மார்பில் தாங்குவதும் முதுகில் ஒருபலகையின்பேரில் 18 பெயரைத் தாங்குவதும் இப்பலவானின் அரிய செயல்களாம்.

*　　*　　*　　*　　*

கும்பகோணம் முனிசிபாலிட்டியார் தங்கள் கடமைகளை ஒழுங்காகவும் சரியாகவும் செலுத்தவில்லையென்றும் கவர்ன்மெண்டார் இரண்டொருமுறை யெச்சரிக்கைசெய்தும் முனிசிபாலிட்டியார் தங்கள் நடத்தைகளில் திருத்தமடையாதிருந்தார்களென்றும் கவர்ன்மெண்டார் குற்றங்கண்டு அம்முனிசிபாலிட்டியின் சுதந்திரங்களைக்

குறைத்திருக்கிறார்கள். 18 பேர் பிரதிநிதிமெம்பர்களிருந்ததை 12 ஆகக்குறைத்துவிட்டார்கள். சேர்மனைத்தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தையும் பிடுங்கிக்கொண்டார்கள். முனிசிபாலிடியையே சிலகாலம்வரை கலைத்திருக்கிறார்கள். தற்கால சூழல்கள் செம்மைப்படுத்தப்பட்டபிறகு குறைந்த சுதந்தரங்களுடன் முனிசிபாலிடியைப்பழையபடியும் அமைக்கலாமென கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்திருக்கிறார்கள். இவ்வேற்பாட்டைப் பல பத்திரிகைகள் குறைகூறுகின்றன.

* * * * *

திருவண்ணாமலைக்கும்பாபிஷேக மகோற்சவம்:—சென்ற வைகாசி 30உ திருவண்ணாமலைக்கும்பாபிஷேகம் மிகச்சம்பிரமமாக நடந்ததைக் கேள்விப்பட்டுச் சந்தோஷப்படுகின்றோம். இதற்கென்று திரளான ஜனங்கள் 10 தினங்களுக்கு முன்னரே வந்து கூடினார்கள். ரயில்வண்டிகளில் இடம் கிடைப்பது அரிதாய் விட்டது. செட்டிகள் இலாகாவிலுள்ள அறந்தாங்கி ஸ்டேஷனிலிருந்து செட்டிகளுக்கென்று தனி ஸ்பெஷல்கள் விடப்பட்டன. ரங்கூன் பர்மா முதலிய தொலைதூரங்களிலுமிருந்து கப்பல்கப்பலாகச் செட்டிகள் வந்து கூடினார்கள். லட்சக்கணக்காக ஜனங்கள் கூடியும் யாதொரு இடையூறுமின்றி எல்லாம் சௌகரியமாகவே நடந்தன. தங்குவதற்கு இடங்கள் போதுமானமட்டும் சௌகரியமாகக்கிடைக்கவில்லையாம். உற்சவசம்பிரமங்கள் மிகவும் விமரிசையாய் நடந்தன.

* * * * *

அமெரிக்காவில் புத்தகசாலையின் அபிவிருத்தி அற்புதமாயிருக்கின்றது.

1800ம் வருஷத்துக்குமுன்னர் 64 புத்தகசாலைகளே இருந்தன.

1800-1825	வரை	179	புத்தகசாலைகள்.
1825-1850	வரை	234	,,
1850-1885	வரை	2,240	,,
1875-1885	வரை	3,560	,,
1885-1895	வரை	5,785	,,
1901		8,000	,,